பக்கங்கள் : பத்து
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 15 திங்கட்கிழமை (31.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 35

# இலங்கை மீது சர்வதேச ஆயுதத்தடை: முன்னெடுக்க ஆஸி. அரசிடம் வலியுறுத்து

## இனப்படுகொலை யுத்தக்குற்றங்களை பார்த்துக்கொண்டு இருக்க முடியாது என்கின்றது அந்நாட்டு அமைப்பு

சிட்னி, டிசம்பர் 31

ஈழத் தமிழர்களுக்கு எதிராகப் பேரழிவு நாசங்களை விளைவித்து வரும் இலங்கைமீது சர்வதேச ஆயுதத் தடையை விதிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஆஸ்திரேலிய அரசை வற்புறுத்திக் கேட்டிருக்கிறது அந்நாட்டின் மனித உரிமைகள் அமைப்பு ஒன்று.

இது தொடர்பாக ஆஸ்திரேலிய அரசை வலியுறுத்தும் மகஜர் ஒன்றைத் தயாரித்து, அதில் ஆஸி. மக்களின் ஒப்பத்தைச் சேகரித்துப் பெற்று அந்நாட்டு நாடாளுமன்றுக்கு அனுப்பும் நடவடிக்கையில் அந்த அமைப்பு தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றது.

'குரலற்றவர்களின் மனித உரிமைகளுக்கான ஆஸ்திரேலியர்களின் அமைப்பு' (Australian For Human Rights Of Voiceless) என்ற நிறுவனமே மனித உரிமைகளில் ஈடுபாடுள்ள ஆஸ்திரேலியப் பிரஜைகள் மத்தியில் இத்தகைய மகஜரில் கையொப்பம் திரட்டி வருகின்றது.

இலங்கையில் அப்பாவி மக்களின் துயர் துடைப்பதற்காகவும் கௌரவமான சமாதானத்தை எட்டும் நோக்கிலும் தங்களால் முன்னெடுக்கப்படும் இந்த முயற்சிக்கு, மேற்படி மனுவில் ஒப்பமிட்டு ஆதரவு தரும்படி அந்த மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள கடிதத்தில் அந்த அமைப்பு, சக ஆஸ்திரேலியப் பிரஜைகளைக் கோரியிருக்கின்றது.

இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவேண்டும், இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்பன போன்ற பல கோரிக்கைகள் ஆஸ்திரேலிய நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிக்கப்படும் இந்த மனுவின் இடம்பெற்றிருக்கின்றன.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் வடக்கு,கிழக்கு மக்களின் நிலைமை குறித்து ஆஸ்திரேலியப் பிரஜைகளான நாங்கள் கவலையடைந்துள்ளோம்.

ஆஸ்திரேலியாவின் பாரம்பரிய விழுமியங்

(09ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சரவை மாற்றம் இப்போதைக்கு இல்லை!

கொழும்பு, டிச. 31

பிறக்கும் புதிய வருடத்தில் ஒருசில அமைச்சுப் பதவிகளுக்கான வெற்றிடங்கள் மட்டுமே நிரப்பப்படும். முழுமையான அமைச்சரவை மாற்றம் இடம்பெறாது.

அரச மேல் மட்டங்களிலிருந்து இவ்விடயம் தெரிய வருகிறது.

அமைச்சரவை மீளாய்வை இப்போதைக்கு மேற்கொள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எண்ணவில்லை எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது வெற்றிடமாகவுள்ள இரண்டு அமைச்சுகளில் தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சர் பதவியை மஹிந்த விஜேசேகரவுக்குக் கையளிப்பதற்கு ஜனாதிபதி கருதினாலும் மஹிந்த விஜேசேகர தற்போது தாம் வகித்துவரும் விசேட திட்ட அமைச்சர் பதவியையே தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார் என

(10ஆம் பக்கம் பார்க்க)

# புதுடில்லிக்கு ரணில் திடீர் விஜயம் நாராயணன், மேனனுடன் பேச்சு

புதுடில்லி, டிச.31

இந்தியாவிற்கு கடந்த வார இறுதியில் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை உட்பட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து அங்கு விரிவாக ஆராய்ந்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க, இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஜனாதிபதியின் அதிகாரத்தை கட்டுபடுத்தவும் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை வலுப்படுத்தவும் தான் முன்வைத்துள்ள அரசமைப்பு சீர்திருத்த யோசனைகள் குறித்து ரணில் புதுடில்லிக்குத் தெளிவு

(10ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பிலிருந்து கொண்டுசெல்லப்பட்ட துணைக்குழுக்களே யாழில் இயங்குகின்றன

## மகேஸ்வரன் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, டிச. 31

இராணுவத்தின் துணைக்குழுக்கள் கொழும்பில் இருந்தே கொண்டு செல்லப்பட்டு யாழ்ப்பாணத்தில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அங்கு வாழும் மக்கள் பாரிய அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

தனியார் ஊடகம் ஒன்றில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இந்தப் புதிய தகவலைத் தெரிவித்திருக்கிறார்.



இது விடயமாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இராணுவத்தின் துணைக்குழுக்கள் ஒவ்வொரு மாதமும் பத்துப் பேர் வீதம் கொழும்பில் இருந்து கொண்டு செல்லப்பட்டு அவர்களைக் கொண்டு படுகொலைகள், கப்பம் மற்றும் கொள்ளையடித்தல் போன்ற சம்பவங்களை நடத்தி வருகின்றனர்.

இதனை மிக விரைவில் நாங்கள் சர்வதேசத்தின் கவனத்திற்குக் கொண்டுசெல்வோம். நான் யாழ்ப்பாணத்தில் நின்றபோது பலரை அடையாளங்காணக்கூடியதாக இருந்தது. அவர்களின்

(10ஆம் பக்கம் பார்க்க)

# கருணாவின் கடவுச்சீட்டு ஆவணங்கள் மாயம்!

கொழும்பு, டிச. 31

போலி இராஜதந்திரக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கருணா பிரிட்டனுக்குள் நுழைந்த விவகாரம் அம்பலமான பின்னணியில் -

அந்த இராஜதந்திர கடவுச்சீட்டை விநியோகித்தமை தொடர்பானமூல ஆவணங்களும், கடிதங்களும், சம்பந்தப்பட்ட கோவைகளில் இருந்து மாயமாக மறைந்து விட்டனவாம்!

ஆங்கில வார இதழ் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றது. கருணாவின் படத்துடன் கூடிய கடவுச்சீட்டு விண்ணப்பத்திற்கு கோகுல துஸ்மந்த குணவர்த்தன என்ற பெயரில் இராஜதந்திர கடவுச்சீட்டை வழங்குமாறு கோரி எழுதப்பட்ட கடிதமும் காணாமல் போயுள்ளதாகக் கூறப்படுகின்றது. (சி)

# இலங்கைக்கு படைச் சாதனங்கள் வழங்க தடைவிதிக்கும் ஆவணத்தில் புஷ் ஒப்பம்

கொழும்பு, டிச. 31

இலங்கைக்கு இராணுவ உதவிகள் வழங்குவது குறித்த 2008ஆம் ஆண்டுக்கான ஆவணத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ். டபிள்யு.புஷ் கையொப்பமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆவணத்தில் சில புதிய சரத்துக்களின்படி படைத்துறை சாதனங்களை விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதுடன், அமெரிக்கா, இலங்கை இராணுவத்திற்கு நிதியுதவி வழங்குவதும் தடைசெய்யப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

இந்தத் தகவலை தமிழ் இணையத்தளம் ஒன்று நேற்று வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கைக்கு படைத்துறை ஆயுதங்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கு அதிகாரப் பகிர்வுக்கு மக்கள் விடுதலை முன்னணி எதிர்ப்பு

கொழும்பு,டிச.31

அரசு எந்த வகையிலாவது வடக்கு, கிழக்கில் அதிகாரத்தைப் பகிர்வதற்கான யோசனையொன்றை முன்வைத்தால், அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு மக்கள்விடுதலை முன்னணி (ஜே.வி.பி) அரசியல் குழு தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் நடைபெற்ற ஜே.வி.பியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது என அதன் அரசியல் குழு வட்டாரத்திலிருந்து தெரியவந்துள்ளது.

பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் பாதுகாப்புப் படையினரின் மனோபலம் சிதைவடைவதற்கும், வன்னி மற்றும் கிளிநொச்சியை மீட்டெடுக்கும் நடவடிக்கை நிறுத்தப்படுவதற்கும் இதன் மூலம் வாய்ப்பு ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டே மக்கள் விடுதலை முன்னணி இத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆடு வீதிக்குக் குறுக்கே ஓடியதால் விபத்து தந்தையும் மூன்று பிள்ளைகளும் காயம்

பருத்தித்துறை,டிசெ.31

பருத்தித்துறை கிராமக்கோட்டுச் சந்தியில் இருந்து புற்றளைக்குச் செல்லும் வீதியில் நேற்று பி.ப 4.30 மணிக்கு நடந்த விபத்தில் தந்தையும் அவரது மூன்று பிள்ளைகளும் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம்,மருதடி லேனைச் சேர்ந்த சேதுபதி விமலரட்னம்(வயது47), நிருஷா (வயது7), நிருஷன்(வயது7), நிதர்சன் (வயது5) ஆகியோரே காயமடைந்தனர்.

புற்றளையில் உள்ள நண்பர் ஒருவரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் இவர்கள் சென்றுகொண்டிருந்த வேளை, ஆடு ஒன்று வீதிக்குக் குறுக்கே ஓடியதால் விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த நால்வரும் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.(அ-1-218)

### சமுர்த்தி நிவாரண விநியோகம்

யாழப்பாணம்,டிசெ.31

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகளுக்கு டிசெம்பர் மாத நிவாரணம் வழங்கப்படவிருக்கின்றது.

இந்த விநியோகத்துக்கான வழங்கற் கட்டளைகளை இன்று மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச்செயலகத்தில்ப.நோ.கூ.சங்கங்கள் பெற்று, பொருள்களை களஞ்சியங்களில் எடுத்து உடன் விநியோகத்தை ஆரம்பிக்குமாறு திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் கேட்டுள்ளார். (அ-1)

# 57 ஆவது படையணித் தளபதி கிளைமோரில் அருந்தப்பாம்!

கொழும்பு, டிச.31

அண்மையில் புதிதாக உருவாக்கப்பட்ட 57 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி வவுனியாவில் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலிலிருந்து மயிரிழையில் தப்பினார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வவுனியாகுருமண்காட்டுப் பகுதியில் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலிலேயே 57 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் மயிரிழையில் உயிர்தப்பினார் எனக் கொழும்பு வாரஇதழ் ஒன்று நேற்றுத் தகவல் வெளியிட்டது.

வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் தளபதியுடன் சென்ற இரு சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### சண்டிலிப்பாயில் அபிவிருத்திப்பணி

வலிதென்மேற்கு, டிசெ.31

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு துரித அபிவித்தித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 8.75 மில்லியன் ரூபா நிதியில் இவ் வருடத்தில் 4.11 மில்லியன் ரூபா பெறுமதியான அபிவிருத்தி வேலைகள்செய்து முடிக்கப்பட்டுள்ளன. (1-135)

### கொமிசியக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்.மறை மாவட்டபுனிதமரியா சேனையின் மாதாந்த கொமிசியக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலைய ஒன்றுகூடல்மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (1-226)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

946 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

01 07 18 51

மீனம்

28-12-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5401681 - 5416592

ஜக்பொட் பரிசு ரூபா. 2,238,150/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 330,084 | 10/- | 3,300,840/- |
| 2 இலக்கங்கள் | 30,278 | 20/- | 605,560/- |
| 1 இல. + லக்கினம் | 30,052 | 30/- | 901,560/- |
| 2 இல. + லக்கினம் | 2,731 | 100/- | 273,100/- |
| 3 இலக்கங்கள் | 818 | 500/- | 409,000/- |
| 3 இல. + லக்கினம் | 76 | 5,000/- | 380,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 2,238,150/- | 2,238,150/- |
| மொத்தம் | | | 8,408,210/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 394,048 | | 9,431,710/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இலக்கம் 4526229 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 ஜனவரி 01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 5407748-0-14 |
| மாத்தறை | 5403749-1-97 |
| கொழும்பு | 5415525-6-53 |
| பொலன்னறுவை | 5406449-8-79 |
| நுவரெலியா | 5402960-5-20 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


### சி.டி.எம்.ஏ.தொலைபேசி பெறுவதற்கு அலுவலகத்தில் மக்கள் கூட்டம்

வலி தென் மேற்கு,டிசெ.31

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ் அலுவலகத்தில் சி.டி.எம்.ஏ.தொலைபேசி கேட்டு தினமும் பலர் விண்ணப்பங்களை சமர்பித்து வருகின்றனர்.

இதே வேளை-ஏற்கனவே இத்தொலைபேசி சேவைக்கு விண்ணப்பித்திருந்தவர்கள் தமக்கு தெலைபேசி விரைவில் கிடைக்குமா? என்று அலுவலகத்திற்க்கு வந்து விசாரித்த வண்ணம் உள்ளனர். அலுவலக கட்டடத்தின் முன் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஏற்கனவே அனுமதி கிடைத்தவர்களின் பெயர் பட்டியலைப் பார்வையிட்டு தமது பெயரும் அதில் உள்ளதா என்று ஆர்வத்துடன் பார்வையிட்டு செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

யாழ.மாவட்டத்தில் கையடக்கத்தொலைபேசிகள் இயங்காத தற்போதைய நிலையில், இந்த சி.டி.எம்.ஏ.தொலைபேசி தமக்கு கிடைக்குமா என்று விண்ணப்பித்திருக்கும் பலரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர். (ப-135)

### வாழைப்பழத்தின் விலை சரிந்தது வெங்காயத்தின் விலை உயர்ந்தது

வலி தென் மேற்கு,டிசெ.31

வலி தென்மேற்கு மற்றும் வலி மேற்குப் பிரதேசத்தில் சந்தைகளில் வாழைப்பழத்தின் விலை மிகவும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

ஒருகிலோ கதலி வாழைப்பழம் 10 ரூபாவாகவும், இதர இன வாழைப்பழம் 12 ரூபா முதல் 15 ரூபாவாகவும் விற்கப் பட்டு வருகின்றன.

இதே வேளை - வெங்காயத்தின் விலையும் என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது. சந்தையில் ஒரு கிலோ 90 முதல் 100 வரையும் தரத்தைபொறுத்து விற்கப்பட்டு வருகின்றது. (1-135)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில

By.ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி , 426(302), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சனி, ஞாயிறு), பிளாக் வீதி, சங்கானை.

"THE ROYAL IS THE BEST"


### வாழ்வாதாரப் பயிற்சிநெறி

யேசுசபை அகதிகள் பணி(ஜெ.ஆர்.எஸ்) நிறுவனத்தினர், தென்மராட்சி பிர தேச வறிய யுவதிகளுக்கு இலவச வாழ்வாதரப் பயிற்சியினை விரைவில் நடத்தவுள்ளனர்.

சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலயத்தில் நடத்தப்படவுள்ள இப்பயிற்சிநெறியில் தையல், ஜசிங்,சிகை அலங்கரிப்பு,பன்னவேலை, ஆடைகளில் வர்ணப்பூச்சு ஆகியவற்றுடன் உளவியல், தலைமைத்துவம், ஆகிய பயிற்சிகளும் நடத்தப்படவுள்ளன. (203-207)


## புதுவருட விழிப்பிரவு ஆராதனை

நீ ஆசீர்வாதமாயிருப்பாய் ஆதி 12 3ப

"You will be a blessing" Gen. 12.3b

பிரியமானவர்களே பிறக்கப்போகிற 2008 ஆம் ஆண்டிற்குள் தேவனுடைய ஆசீர்வாதத்தோடு கடந்துபோக விரும்புகிறீர்களா? எங்களோடு கூட நீங்களும் வந்து தேவனைஆராதித்து தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.

இடம்: கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்
*89, பிறவுண் வீதி, கொக்குவில்.*
காலம்: 31.12.2007 (திங்கட்கிழமை)
நேரம்: *இரவு 10.00 மணிக்கு*

**புதுவருட காலை ஆராதனை**

கொக்குவில், மானிப்பாய், அளவெட்டி ஆகிய இடங்களில் காலை 8.30 மணிக்கு நடைபெறும்

*பிறக்கும் புதிய வருடம் உங்கள் யாவருக்கும் இனிதாய் அமைவதாக!*

**கல்வாரி குடும்பம்**

கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்,
89, பிறவுண் வீதி, கொக்குவில். *(68535)*



PLC

## பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி லிமிட்டட் யாழ்ப்பாணம்

**வாகனம், பொறி விற்பனை**

வான்

| இலக்கம் | வகை | உற்பத்தி திகதி |
|---|---|---|
| 250 - 3535 | Toyota Hiace | 1993 |
| மோட்டார் சைக்கிள் | | |
| WPHZ 8414 | Suzuki GS 125 | 2003 |
| WPMF0664 | LML Freedom | 2004 |
| உழவு இயந்திரப் பெட்டி | - Un Registered | |

**பார்வையிடும் இடங்கள் :**

(01) வான் : பீப்பில்ஸ் லீசிங் கம்பனி, 82, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்
(02) மோட்டார் சைக்கிள் : பீப்பில்ஸ் லீசிங் கம்பனி, 82, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்
(03) உழவு இயந்திரப் பெட்டி : மக்கள் வங்கி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

பார்வையிடும் காலம் : 31.12.2007 தொடக்கம் 03.01.2008 வரை
பார்வையிடும் நேரம் : காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : பீப்பில் லீசிங் கம்பனி லிமிட்டட் இல 82, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

மேலதிக விபரங்களுக்கு : தொ. இல : 021 222 8031, 021 222 9627
ரெண்டர் யூனிற் : 011 2490036


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகரத்தினம் இரத்தினம்மா

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் இரத்தினம்மா நேற்று (30.12.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர், புங்க்ன்குளம்)அவர்களின் மனைவியும், காலஞ் சென்றவர்களான தம்பையா-செல்லம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற இராமுப்பிள்ளை-சின்னம்மா தம்பதியினரின் மருமகளும், சிவதாசன் (ஊழியர், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), குகதாசன் ஆகியோரின் தாயாரும், யசோ தரா, கலைவாணி ஆகியோரின் மாமியாரும், சுகன்ஜா சாவித்திரி, லக்சனா, மகிசான், சகானா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.12.2007) திங்கட்கிழமை பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு.*
K.சிவதாசன், K.குகதாசன் மகன்மார்
(69539)

### சின்னையா தனபாலசிங்கம்



(இளைப்பாறிய பிரதம இலிகிதர். சுகாதார திணைக்களம்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தனபாலசிங்கம் (29.12.2007) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-தங்கலெட்சுமி தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான கயிலாசபிள்ளை-தங்கரத்தினம் தம்பதியினரின் மருமகனும்,அமிர்தரத்தினத்தின் கணவரும் ஜெயந்(அமெரிக்கா), சுரேத்(கனடா) ஆகியோரின் தந்தையாரும், கமல்,உமா ஆகியோரின் மாமனாரும், அலெக்ஷியா, யுலிற்றா, நிலானி, சேந்தினி, சேவீத்தா ஆகியோரின் பேரனாரும், காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் மகாலிங்கம், இராமத்திலகம் ஆகியோரின் சகோதரரும், திருமதி யோகரத்தினம்-கனகசபாபதி, தருமரத்தினம், பஞ்சரத்தினம், திருமதி சுகிர்தரத்தினம், மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2007) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். *(69538)*

*தகவல்:*
"யோகஸ்தி",மானிப்பாய். பஞ்சரத்தினம் (மைத்துனர்)

### வீரகத்தி இராசா

பன்னாலை, தெல்லிப்பழையை பிறப்பிட மாகவும் கொல்லன் கலட்டிப் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது துரை வீதி, இணுவிலில் வசித்தவருமான வீ.இராசா நேற்று (30.12.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் (இராணி) அன்புக் கணவரும், முருகையாவின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பன்னாலையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (31.12.2007) பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.சரஸ்வதி (மனைவி)
மு.ஜெயராணி (பெறாமகள் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை)
துரைவீதி, இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெனாஸிர் படுகொலை குறித்த

# சர்வதேச விசாரணையை நிராகரித்தது பாகிஸ்தான்



பெனாஸிர் மீது துப்பாக்கிச்சூடு நடந்தபோது எடுக்கப்பட்ட படம் என அரசு வெளியிட்டுள்ள தெளிவற்ற படம் இதுதான்.

இஸ்லாமாபாத், டிச.31

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் மரணத்திற்கான காரணங்கள் குறித்து சர்ச்சை மூண்டுள்ள அதேவேளை, இதுகுறித்து சர்வதேச சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை அந்த நாட்டு அரசு நிராகரித்துள்ளது.

அரசினால் விசாரணைகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ள உள்துறை அமைச்சகப் பேச்சாளர் ஜாவிட் இக்பால் சீமா, சர்வதேச உதவி அவசியமில்லையென்றும் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதியொருவர் நியமிக்கப்பட்டு ஏழு நாள்களுக்குள் சுதந்திர நீதி விசாரணைகள் பூர்த்தியாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான ஜனநாயகக் கட்சி செனட்டர் ஹிலாரி கிளின்ரன், பெனாஸிர் பூட்டோவின் மரணம் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணைகள் அவசியம் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் அரசை நம்பமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். வேறு பலரும் சர்வதேச விசாரணைகளுக்கான கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

பாகிஸ்தான், அமெரிக்காவின் உதவியை உத்தியோகபூர்வமாகக் கோரவில்லையென வெள்ளை மாளிகைப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். விசாரணைகள் முழுமையாக நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு பாகிஸ்தான் அரசினுடையது. அந்த நாடு உதவி கோரினால், தாங்கள் அது குறித்துப் பரிசீலிப்போம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, விசாரணைகளை எவ்வளவு சிறப்பாக முன்னெடுக்கலாம் என்பது குறித்து பாகிஸ்தான் ஏனைய அரசுகளுடனும் பேச்சுகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவுடன் பேச்சு நடைபெறுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானிய அதிகாரிகள் இதனை உறுதிசெய்யவில்லை.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபான்ட் தனது நாடு விசாரணைகளுக்கு உதவத் தயார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

முழுமையான விசாரணைகள் நடைபெறுவதும், அது அனைவரினதும் நம்பிக்கையைப் பெறுவதும் மிக அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பெனாஸிருக்கு ராசியில்லாத '9'

இஸ்லாமாபாத், டிச.31

எண் ஜோதிடத்தில் நம்பிக்கை கொண்டவர்கள், மறைந்த பெனாஸிர் பூட்டோவுக்கு எண் ஒன்பது ராசியில்லாத எண்ணாக அமைந்து விட்டது என்று சொல்கிறார்கள். இதற்கு அவர்கள் பெனாஸிரின் வாழ்க்கையில் நடந்த பல்வேறு நிகழ்வுகளைச் சான்றாக குறிப்பிடுகிறார்கள். பெனாஸிர் பிறந்த ஆண்டு 1953. இதனை முறையே 1+9+5+3 என்று கூட்டினால் 9 வரும். அவர் படுகொலை செய்யப்பட்ட ஆண்டான 2007ஆம் ஆண்டை 2+0+0+7ஐ கூட்டினால் 9 வருகிறது.

சர்தாரியை பெனாஸிர் திருமணம் செய்து கொண்டது டிசம்பர் மாதம் 18ஆம் திகதியாகும். (இதைக் கூட்டினால் 9 வரும்) திருமணத்திற்குப் பிறகு அரசியல் வாழ்க்கையில் பல்வேறு சங்கடங்களைப் பெனாஸிர் சந்திக்க நேரிட்டது என்றும் அவருடைய கணவருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன என்றும் எண் ஜோதிட நம்பிக்கையாளர்கள் கூறுகின்றார்கள்.

பாகிஸ்தானில் இருந்து வெளியேற்றப்பட்டு டுபாய்க்கு பெனாஸிர் சென்ற ஆண்டு 1998 ஆகும். இதையும் கூட்டினால் வருவது 9 ஆகும். கடைசியாக அவர் படுகொலை செய்யப்பட்ட 27ஆம் திகதியைக் கூட்டினாலும் 9 என்ற இலக்கமே வருகின்றது. இவ்வாறு பெனாஸிர் வாழ்க்கையில் பல்வேறு சரிவுகளை எண் '9' ஏற்படுத்தியுள்ளது என்று சொல்லப்படுகிறது. இந்தத் தகவல்கள் மின்னஞ்சல் மற்றும் இணையத்தளங்களில் பரவி வருகின்றன.

# தேர்தலைப் புறக்கணிக்காதீர்கள்!

## அமெரிக்கா வேண்டுகோள்

வாஷிங்டன், டிச.31

தேர்தலைப் புறக்கணிக்காதீர்கள் 'என்று பாகிஸ்தான் அரசியல் கட்சிகளுக்கு அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது. மீண்டும் நெருக்கடி நிலையை அமுல்படுத்தக் கூடாது என்றும் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத் துறைத் துணைச் செய்தித் தொடர்பாளர் டாம் கேசி கூறியவை வருமாறு:-

''பாகிஸ்தானில் மீண்டும் நெருக்கடி நிலையை அமுல்படுத்தக்கூடாது என்று நாங்கள் விரும்புகிறோம். பாகிஸ்தான் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும் என்று இடைக்காலப் பிரதமர் முகமதியன் சூம்ரோ அறிவித்துள்ளார். தேர்தல் அதே நாளில் நடைபெறுமா என்று எனக்குத் தெரியாது. அனைவரது சம்மதத்துடன் வேறு ஒரு திகதிக்குத் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டாலும் அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். எந்தத் திகதியாக இருந்தாலும், தேர்தல் நடைபெறுவதுதான் முக்கியம்.

''இந்தத் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக நவாஸ் ஷெரீப் கட்சி அறிவித்துள்ளது. அவருக்கு மட்டுமன்றி அனைத்து மிதவாத அரசியல் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கிறோம், தேர்தலைப் புறக்கணிக்க வேண்டாம். பாகிஸ்தான் மக்கள், தங்களது அரசைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பு அளிக்கும் வகையில், தேர்தலில் போட்டியிடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம். தீவிரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் ஒன்றுபட்டுப் போராடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம்.'' - இவ்வாறு அவர் கூறினார்.

## உலகப் புகழ்பெற்றவர் பெனாஸிர் கொலைக்கு நாங்கள் பொறுப்பல்ல

### அல் - குவைதா திடீரென 'பல்டி'

பெஷாவர், டிச. 31

பெனாஸிர் பூட்டோவை உலகப் புகழ் பெற்ற தலைவி எனப் பாராட்டியுள்ள அல் - குவைதா, ''பெனாஸிர் பூட்டோவை நாங்கள் கொல்லவில்லை. முஷாரப் அரசும் இராணுவமும் சதிசெய்து கொன்றுவிட்டு நாடகம் ஆடுகின்றன.'' - என்றும் கூறியுள்ளது.

பெனாஸிர் படுகொலைக்கு அல் - குவைதாத் தீவிரவாத அமைப்புத்தான் காரணம் என்று பாகிஸ்தான் அரசு அறிவித்தது. அதற்கு ஆதாரமாக கொலைக்கு நேரடி உத்தரவு பிறப்பித்த அல் - குவைதா அமைப்பின் பாகிஸ்தான் தலைவர் பைதுல்லா மசூத், கொலை நடந்த பிறகு அது தொடர்பாக தீவிரவாதி ஒருவருடன் தொலைபேசியில் பேசிய பேச்சையும் அது வெளியிட்டது. இதை பைதுல்லா மசூத் மறுத்துள்ளார். பழங்குடியினத்தைச் சேர்ந்த மசூத், பாகிஸ்தானின் வரிசிஸ்தான் பகுதியில் இருக்கிறார். இது தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு மசூத்தின் செய்தித் தொடர்பாளர் மௌலானா ஓமர் அளித்த செவ்வியில் கூறியிருப்பவை வருமாறு:-

''பெனாஸிரைக் கொன்றது அல் - குவைதா இயக்கம்தான் என்று பாகிஸ்தான் அரசு கூறுவது கட்டுக்கதை. எங்கள் இயக்கம் பெனாஸிரைக் கொல்லவில்லை. பாகிஸ்தான் அரசு, இராணுவம், உளவுத்துறை ஆகியவை சதி செய்து பெனாஸிரைக் கொன்றுவிட்டு எங்கள் இயக்கம் மீது பழிபோடுகின்றன. பைதுல்லா மசூத்தும் தீவிரவாதி ஒருவரும் தொலைபேசியில் பேசினர் என்று அரசு வெளியிட்ட தகவலும் ஒரு நாடகம்தான்.

''பழங்குடி இனத்தவர்களுக்கு பெண்களைக் கொல்லும் பழக்கம் கிடையாது. அதுதவிர பாதுகாப்புக் கெடுபிடிகள் நிறைந்த ராவல் பிண்டியில் எங்களால் ஊடுருவ முடியாது. பெனாஸிர் பாகிஸ்தானுக்கு மட்டும் தலைவியல்ல. அவர் ஒரு உலகப் புகழ்பெற்ற தலைவி. அவருடைய மரணத்துக்கு எங்களின் ஆழ்ந்த இரங்கலையும் அதிர்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.'' - இவ்வாறு ஓமர் கூறியுள்ளார்.

# அல்-குவைதாவின் புனித யுத்தம் இஸ்ரேலுக்கும் விஸ்தரிக்கப்படும்!

## இரத்தத்துக்கு இரத்தமே பதில் என்கிறார் பின்லேடன்

நியூயோர்க், டிச.31

அல் - குவைதாவின் புனித யுத்தம் இஸ்ரேலுக்கு விஸ்தரிக்கப்படும் என்று புதிய ஒளிநாடாவொன்றின் வாயிலாக ஒஸாமா பின்லேடன் எச்சரிக்கையொன்றினை விடுத்துள்ளார். இது குறித்து அவர் ''இரத்தத்துக்கு இரத்தம்; அழிவுக்கு அழிவு'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, அல் - குவைதாவுக்கு எதிராகப் போராடும் ஈராக்கிய சுனி அரேபியர்களுக்கும் இந்த ஒளிநாடா வாயிலாக பின்லேடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நாடாவில் பாகிஸ்தானைப் பற்றியோ, பெனாஸிர் பூட்டோவின் படுகொலை குறித்தோ ஏதும் குறிப்பிடப்படவில்லை. கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இப் படுகொலை தொடர்பாக பாகிஸ்தான் அல் - குவைதா மீதும் தலிபான்கள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றது. ஆதலால் இந்த நாடா இப்படுகொலைக்கு முன்னர் 'பதிவுசெய்யப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

''பாலஸ்தீனத்தை விடுவிப்பதே எமது நோக்கமாகும். ஜோர்தான் நதியிலிருந்து கடல் வரை பாலஸ்தீனம் விடுவிக்கப்படும். இரத்தத்துக்கு இரத்தம் அழிவுக்கு அழிவு.'' என்றும் பின்லேடன் அதில் சூளுரைத்துள்ளார்.

''இதர முஸ்லிம் தலைவர்களைப் போல நாமும், பாலஸ்தீன மண்ணில் ஓர் அங்குலத்தையேனும் யூதர்களுக்காக அங்கீகரிக்க மாட்டோம்.'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, பாலஸ்தீன எல்லையில் அல் - குவைதா நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது. பின்லேடனின் வழக்கத்துக்கு மாறான இஸ்ரேல் மீதான திடீர் நேரடித் தாக்குதல், இஸ்ரேல் - அரேபியர் யுத்தத்தில் தம் ஆதரவாளர்களை அணி திரட்டுவதற்கான ஓர் உபாயமாகுமென அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளார்கள்.

ஈராக்கைப் பொறுத்தமட்டில் மேற்கு அன்பார் மாகாணத்தில் அல் - குவைதாவுடன் தொடர்புடைய தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராட அநேக சுனி அரேபியப் பழங்குடி அமைப்புகள் ஒருங்கிணைந்து கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளன. அதனால், இம் மாகாணத்தில் வன்முறைகள் வெகுவாகக் குறைந்துள்ளன என்றும் அமெரிக்க அதிகாரிகள் பெருமிதம் தெரிவித்துள்ளார்கள்.

இதைப்போல ஈராக்கின் இதர இடங்களிலும் 'விழிப்புக் குழுக்களை' நிறுவுவதில் அமெரிக்க இராணுவமும் ஈடுபட்டு வருகின்றது. இதுகுறித்தும் பின்லேடன் தமது உரையில் எச்சரிக்கையொன்றினை விடுத்துள்ளார்.

''விழிப்புக் குழுக்களில் சேர்ந்துள்ள சுனி அரேபியர் தேசத்துரோகிகள். தம் மக்களை அவமானத்தாலும் வெட்கத்தாலும் தலைகுனிய வைத்துள்ளார்கள். இந்த வாழ்க்கையிலும், இதன் பின்னரும் அவர்கள் அந்தரிப்பார்கள்.'' - என்றும் அவர் சாடியுள்ளார்.

வெள்ளை மாளிகைப் பேச்சாளர் டொனி பிரேட்டோ இதுகுறித்துக் கருத்து வெளியிடுகையில், ''அனைத்து ஈராக்கிய மக்களும் ஜனநாயகத்தை எய்துவதற்கு தடை விதிக்க வேண்டுமென்பதே அல் - குவைதாவின் நோக்கமாகும். இதனையே இந்நாடா பிரதிபலிக்கின்றது.'' எனக் குறிப்பிட்டுள்ளார்.




# பெண்ணுக்கு ஆயுளை அதிகரிக்கும் தோழிகள்

## அமெரிக்க நிபுணர்களின் ஆய்வில் தகவல்

புதுடில்லி, டிச.31

அதிக பெண்களைத் தோழிகளாக அடைந்த பெண்ணுக்கு ஆயுள் அதிகரிக்கும். வாழ்க்கையில் தன்னம்பிக்கை ஏற்படும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

பெண்களுக்கு ஏற்படும் மன அழுத்தம், தன்னம்பிக்கை, நீண்ட ஆயுள் பற்றி கலிபோர்னியா (அமெரிக்கா) பல்கலைக்கழகம் ஆய்வு ஒன்றை நடத்தியது.

இதில் ஒரு பெண்ணுக்கு நட்பு ரீதியிலான தோழிகள் இல்லை என்றால் தன்னம்பிக்கையை இழந்து விடுகிறார். துயரத்தில் தவிக்கும் சமயத்தில் அதில் இருந்து விடுபட முடியாமல் தவிக்கிறார். இத்தகைய பெண்களுக்கு ஆயுள் குறைகிறது. ஆனால், ஒரு பெண்ணுக்கு நிறைய தோழிகள் இருந்தால் அந்தப் பெண்ணுக்கு தன்னம்பிக்கை ஏற்படுகிறது. துயரமான நேரத்தில் மனம் விட்டுப் பேசி ஆறுதல் பெறவும் முடிகிறது. இதுபோன்ற பெண்களின் ஆயுள் பலமும் அதிகரிக்கிறது என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

இது குறித்து புதுடில்லி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மனோதத்துவ பேராசிரியர் டாக்டர் அருணா ப்ருட்டா கூறுகையில்,

''பெண்கள் விசுவாசம் மிக்கவர்கள். ஒருவரோடு ஒருவர் பழகும்போது மனம்விட்டு பேசும் தன்மை கொண்டவர்கள். ஒரு பெண்ணுக்கும் இன்னொரு பெண்ணுக்கும் ஏற்படும் நட்பு ஆழமானது. அதேசமயம் ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையே ஏற்படும் நட்பு அப்படிப்பட்டதல்ல.''

ஒரு பெண் தனக்கு முன்பின் பழக்கம் இல்லாத இன்னொரு பெண்ணுடன் எளிதில் நட்பை ஏற்படுத்திக் கொள்கிறார். அவர்களுக்கு இடையே எந்த எதிர்பார்ப்பும் போட்டியும் இல்லை. ஒருவருக்கொருவர் விசுவாசமாகி விடுகிறார்கள்.

ஆனால், இதுபோன்ற நட்பு ஏற்படுவது அபூர்வம் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாழ்.மாவட்ட பாடசாலைகளிடையே இடம்பெற்ற

# உள்ளக விளையாட்டுகளில் வெற்றிபெற்ற அணியினர், தனிநபர் முதற்தடவையாக கௌரவிப்பு

வலி.வடக்கு,டிசெ.31

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே இடம் பெற்ற உள்ளக பெரு விளையாட்டுக்கள் மற்றும் தட களப் போட்டிக ளில் வெற்றியீட்டிய குழு மற்றும் தனி நபர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு முதல் தடவையாக இடம்பெற்றுள்ளன.

யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் மு.வ.செல் வராசா தலைமையில் அண்மையில் நிகழ்வுகள் இடம் பெற்றன.



பிரதம விருந்தினர் மேலதிக மாகாணகல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் உரையாற் றுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கலந்துகொண் டார்.

விழாவுக்கு வேண்டிய ஏற்பாடுகளை யாழ்.மாவட் டப் பாடசாலைகளின் விளை யாட்டுக்குழு செயலாளரும் யாழ்ப் பாணக் கல்விவலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளருமான க.குமார சாமி மேற்கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் வடமா காண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தி யபாலன், முன்னாள் வலி காமம் கல்வி வலய உதவி உடற்கல்விப் பணிப்பாளர் சி.பாலசிங்கம், யாழ்.இந்துக் கல்லூரி உப அதிபர் எஸ்.ம கேஸ்வரன் உட்பட பாட சாலை அதிபர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், ஆசிரி ய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்க ளும் கலந்துகொண்டார்கள்.

(203-86)

## உள்ளூராட்சி அலுவலகங்களில் பொதுசனத் தொடர்பு அலுவலர்

யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ். மாவட்ட உள்ளூராட்சிசபை அலுவலகங்களில் பொதுசன தொடர்பு அலுவலர் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணுதல், வரியிறுப்பாளர் களுக்கு திருப்திகரமான சேவையினை வழங்குதல், மக்களின் தேவை களுக்கு மதிப்பளித்தல் போன்று உள்ளூராட்சி மன்றங்கள் மக்க ளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதால் இந்த அலுவ லரின் சேவை அவசியமென கருதப்படுகின்றது.

இதனால் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றுவோரில் இப் பதவிக்கு தகுதியானவரின் பெயர், பதவி ஆகிய விவரங் களை அனுப்பிவைக்குமாறு உள்ளூராட்சிசபை செயலாளர் களை யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கேட் டுள்ளார்.

(203-207)

## சங்கானைக் கோட்ட தாச்சிப் போட்டி முடிவு

வலி.தென்மேற்கு, டிசெ.31

சங்கானை கல்விக் கோட்ட ஆரம்ப பிரிவு பாடசாலைகளுக்கிடையே நடை பெற்ற தாச்சிப்போட்டியின் இறுதிப் போட்டி வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி விளை யாட்டு மைதானத்தில் அண்மை யில் நடைபெற்றது.

இப்போட்டியின் வெற்றிபெற்ற பாடசா லைகளின் விவரம் வருமாறு

காட்டுப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, பண்ணாகம் வடக்கு அமெ ரிக்கமிஷன் த.க.பாடசாலை, சுழிபுரம் ஐக்கிய சங்கம் சைவ தமிழ் கலவன் பாடசாலை.

(203-135)

## வடமராட்சிப் பகுதியில் ஆள்கள் இல்லாத வீடுகளில் கூரை ஓடுகள் திருட்டு

உடுப்பிட்டி, டிசெ.31

வடமராட்சிப்பகுதியில் ஆள்கள் இல் லாத வீடுகள் மற்றும் ஆலயங்கள், பொது நிறுவனங்களில் கூரை ஓடுகள் களவா டப்பட்டு வருகின்றன என்று தெரிவிக் கப்படுகிறது.

தற்போது ஓடு ஒன்றின் விலை 65 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வரு வதால் இத்திருட்டுச் சம்பவங்கள் அதி கரித்துள்ள தாகக் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(203-155)

## மகளிர் அபிவிருத்தி பயிற்சி நெறி ஜனவரியில்

வலி. தென்மேற்கு, டிசெ.31

வலி தென்மேற்கு (சண்டிலிப்பாய்) மற்றும் வலி.மேற்கு (சங்கானை) ஆகிய இரு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான 2008 ஆம் ஆண்டுக்கான மகளிர் அபிவிருத்தி பயிற்சி நெறி ஜனவரி மாதத்தில் வடலி யடைப்பு கிராம அபிவிருத்தி சங்க மண்ட பத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் பயிற்சி பெறுவதற்காக 35 பெண்கள் மேற்படி இரு பிரதேச செய லாளர் பிரிவுகளிலுமிருந்து நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டுள் ளனா. ஒரு வருடகாலம் இப்பயிற்சி நெறி நடைபெறும் என்றும், பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் என்றும் தெரி விக்கப்படுகின்றது. வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசர ணையுடன் இப் பயிற்சி நெறி நடத்தப்ப டுகின்றது.

(203-135)


### ஆசிரியர் தேவை

தரம்1, தரம் 4 ஆகிய மாணவர்களுக்கு வீட்டிற்கு வந்து கற்பிக்கக் கூடிய பெண் ஆசிரியர் தேவை, தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

க.அற்புதராஜா

கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(69533)

### தவறிவிட்டது

ஜெயக்குமார் குணரூபன், மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் எனும் முகவரியுடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் தயவுசெய்து அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது உள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(69533)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.நாகலிங்கம் சண்முகலிங்கன்

யாழ்.பல்கலைக்கழகத்தில் புதிய துணைவேந்தராக 26.12.2007இல் பதவியேற்றிருக்கும் சமூகவியலாளரும் யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறைத்தலைவரும், தமிழ்க்கல்வி உலகின் வழிகாட்டியுமாகிய பேராசிரியர் நாகலிங்கம் சண் முகலிங்கன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
பாதுகாப்பு உத்தியோகத்தர்
நலன்புரிச்சங்கம்,
பாதுகாப்பு திணைக்களம்

யாழ்.பல்கலைக்கழகம்
திருநெல்வேலி.

(69499)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண் மகிழ்ந்தது
09 ★ 01 ★ 1974



கண் கசிந்தது
01 ★ 12 ★ 2007

### அமரர் அருணாசலம் கமலகுமார்

(தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்)

ஜீவிதத்தில் நனி சிறக்க
நல்லவை ஏற்றிட்ட நாயகமே
எம் குடும்ப ஒளி விளக்கே
மரணத்திலும் என்றும் நீ எம்
நினைவுகளில் வாழ்ந்து
கொண்டிருப்பீர்

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (31.12.2007) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம் பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத் திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்.

38/4, மணற்தரை லேன்,
கந்தர்மடம்.

(69530)

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி- குமாரசிங்கம் சறோஜா

எமது குடும்ப நண்பர் செல்லையா குமாரசிங்கம் (ச.நீ) அவர்களின் அன்பு மனைவி

### குமாரசிங்கம் சறோஜா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதீப் தொலைத்தொடர்பு நிலையம்,
பிரதீப் புத்தகசாலை
பிரதான வீதி, சங்கானை.

தகவல்:-
க.மகாலிங்கம் (குடும்பம்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### ஆறுமுகம் திருநாவுக்கரசு

மலர்வு
26★03★1940

உதிர்வு
12★01★2007

திதி: 31.12.2007

அன்பின் சிகரமே!
நீங்கள் மறைந்து ஆண்டு ஒன்றானதோ?
உங்களை இனி எங்கு காண்போம்?
ஐயா! மீண்டும் ஒருமுறை பிறந்திட
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

செ.மோகன்
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(69528)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
14 ★ 07 ★ 1936



இறப்பு
23 ★ 12 ★ 2005

### திருமதி சிவகாமசுந்தரி கந்தையா

(ஓய்வுபெற்ற அதிபர்)

திதி: மார்கழி மாத அபரபக்க அட்டமி 31.12.2007

எங்கள் குடும்ப விளக்கு மறைந்து
ஈராண்டென்ன எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
எங்கள் மனதை விட்டு அகலாது
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல குருக்கள் சிணற்றடி
விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

கணேஸ்வரம்,
அளவெட்டி.

(69480)

குடும்பத்தினர்.

## நீங்காத நினைவுகளுடன் முதலாம் ஆண்டில்



### அமரர் செல்லையா செல்வராசா

(சீமெந்துக் கூட்டுத்தாபனம்)

திதி: 31.12.2007

ஆண்டு ஒன்று அல்ல பல்லாயிரம் ஆனாலும்
அழியாத ஒளியாய் எம்மனதில் நீர் இருப்பீர்

நெசவுசாலை வீதி,
மாவிட்டபுரம் கிழக்கு,
தெல்லிப்பழை.

தற்போதைய முகவரி:
லவ் லேன், உடுவில்.

உம்பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(69526)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வெள்ளி விழா நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் யாழ். பல்கலைக் கழக வணிகத்துறை விரிவுரையாளர் எஸ்.தேவராஜா வெள்ளிவிழா மலர் நயப்புரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும், யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா ஆகியோர் கூட்டுறவாளர்களைக் கௌரவிப்பதை அடுத்துள்ள படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை அடுத்த படத்திலும் காணலாம்.

# யாழ். மாவட்டத்தில் சுகாதாரப் பிரச்சினைகளை துரிதமாக தீர்க்க மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட வேண்டும்

## யாழ். அரச அதிபர் உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்து



பருத்தித்துறை,டிசெ.31

யாழ். மாவட்டத்தில் காணப்படும் சுற்றாடல் சுகாதாரம் சம்பந்தமான பிரச்சினைகளத் துரிதமாகவும், வினைத்திறனு டனும் தீர்க்கும் நோக்குடன் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் பிரதேச சுற்றாடல் சுகாதார மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட வேண்டும் என யாழ். அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அரச அதிபர், யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கால்நடை வைத்திய அதிகாரிகளுக்கு விடுத்துள்ள அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளதாவது:-

பிரதேச செயலகப் பிரிவில் இனங் காணப்படும் சுற்றாடல் சுகாதாரப் பிரச்சினைகளை இயன்றளவு உடனுகுடன் தீர்க்க இப்பிரதேச சுற்றாடல் சுகாதார மேம்பாட்டுக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு போன்ற நோய்களின் பரம்பல் வருடாவருடம் அதிகரித்து வருவதனால் நீண்ட கால அடிப்படையிலும் இக் குழுவின் அவசியம் உணரப்படுகின்றது.

பிரதேச செயலாளர்கள் ஜனவரி முதல் இப்பிரதேச சுற்றாடல் சுகாதார மேம்பாட்டுக் குழுவை அமைத்து அனைவரது ஒத்துழைப்புடன் தமது பிரிவுக்குட்பட்ட சுற்றாடல் சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இக்குழு தொற்று நோய் பரம்பல் கட்டுப்பாடு, நுளம்புக் கட்டுப்பாடு, திண்மக் கழிவு முகாமைத்துவம், கழிவு நீர்முகாமைத்துவம், மழை நீர் சேமிப்பு, விலங்கு விசர் நோய்க் கட்டுப்பாடு, பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கல், மலகூடங்கள் அமைப்பதை ஊக்குவித்தல், நலன்புரி நிலையங்களின் சுகாதார மேம்பாடு, பாதீனியக் கட்டுப்பாடு, சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்தல், மயானங் களின் பராமரிப்பு, ஒலிக்கட்டுப்பாடு, விலங்கறுமனைகளின் சுகாதாரம், பொதுச் சந்தைகளின் சுகாதாரம், சட்டவிரோத மது உற்பத்தி விற்பனைக் கட்டுப்பாடு, சட்டவிரோத விலங்கறுப்புக் கட்டுப்பாடு, அனர்த்த முகாமைத்துவ தயார் நிலை, சட்டவிரோதமான மண் அகழ்வு போன்ற விடயங்களைக் கண்காணிக்க வேண்டும்.

இப்பிரதேச சுற்றாடல் சுகாதார மேம்பாட்டுக் குழுவின் தலைவராக பிரதேச செயலாளரும், செயலாளராக சுகாதார வைத்திய அதிகாரியும் செயற்படுவர். உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகள், கால்நடை வைத்திய அதிகாரி, சுற்றாடல் உத்தியோகத்தர்கள், நலன்புரி நிலையப் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், விவசாயத் திணைக்கள பிரதிநிதி, மது வரி உத்தியோகத்தர் ஆகியோர் அங்கத்தவர்களாகவும் செயற்படுவார்கள் என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

(203-218)

# இலங்கை போக்குவரத்துச் சபையின் 50ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நாளை

குருநகர்,டிசெ.31

இலங்கை போக்குவரத்துச் சபையின் 50ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை இலங்கை முழுவதும் உள்ள அனைத்து இலங்கை போக்குவரத்துச் சபையின் சாலைகள், அலுவலகங்களில் இடம்பெறவுள்ளன.

இலங்கை போக்குவரத்துச் சபை 1958 ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி அப்போதைய பிரதமர் அமரர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவால் உருவாக்கப்பட்டது. தேசியமயக் கொள்கைத் திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள சகல தனியார் போக்குவரத்து கம்பனிகள் யாவும் அரசுடைமையாக்கப்பட்டு இலங்கைப் போக்குவரத்துச் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

தற்போது நாடு முழுவதிலும் உள்ள 107 சாலைகளில் 4,685 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் சுமார் 36ஆயிரம் ஊழியர்களுக்கு மேல் இச்சபையில் கடமையாற்றுகின்றனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

வடபகுதியைப் பொறுத்தவரையில் பிராந்திய சபையின் கட்டுப்பாட்டில் இது வரை இயங்கிவந்த யாழ்ப்பாணம், பருத்தித் துறை, காரைநகர், மன்னார், வவுனியா ஆகிய சாலைகள் தற்போது இ.போ.ச. தலைமைக் காரியாலயத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் வந்துள்ளன எனவும் இச் சாலைகளில் சராசரி 155 பேருந்துகள் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(203)




# போத்தலில் அடைத்த கள் வடமராட்சியில் விற்பனையில்

கட்டைவேலி,டிசெ.31

வடமராட்சிப் பகுதியில் உள்ள கள்ளுத் தவறணைகளில் போத்தலில் அடைக்கப்பட்ட பனங் கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கள்ளுச் சீசன் முடிவடைந்ததை அடுத்து, பனங் கள்ளுக்கு பற்றாக் குறையும், தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து இங்குள்ள பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் தவறணைகள் மூலம் போத்தலில் அடைக்கப்பட்ட பனங் கள்ளை விற்பனை செய்து வருகின்றன.

போத்தலில் அடைக்கப்பட்ட பனங்கள் ஒரு போத்தல் 50 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வருட முற்பகுதியில் பனங் கள் சீசன் நிலவிய காலத்தில் மிதமிஞ்சிய கள்ளை பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் போத்தல்களில் அடைத்து சேமித்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(203-275)

# பிரான்பற்று கலைமகள் வித்தியாலய நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ,31

பிரான்பற்று கலைமகள் வித்தியா லயத்தின் நூற்றாண்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் வே.சிவசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக வலி.தென்மேற்கு பிரதேசச் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், முன்னாள் வலிகாமம் - தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. கந்தசாமி, முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க. தனபாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இவ் விழாவில் நூற்றாண்டு விழா மலர் வெளியிட்டு வைக்கப்படுவதுடன், கல்லூரிப் பெயர் வளைவும் திரை நீக்கம் செய்து வைக்கப்படும். மலருக்கான வெளியீட்டுரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் பா.மகாலிங்கசிவம் நிகழ்த்துவார். காத்தவராயன் சிந்து நடைக் கூத்து, அரிச்சந்திரன் இசை நாடகம் உள்ளிட்ட மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

(203)

# கசிப்பு விற்பனை செய்தோருக்கு 2 லட்சத்து 75ஆயிரம் அபராதம்

பருத்தித்துறை,டிசெ.31

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நான்கு பேருக்கு பருத்தித்துறை நீதிமன்றம 2 லட்சத்து 75ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்கள பரிசோதகர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் போது இவர்கள் கசிப்பு விற்பனையில் ஈடபடுவது கண்டுபிடிக்கப்பட்டது.

மூவரையும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் பதில் நீதிவான் பி.குமாரசாமி முன்னிலையில் அவர்கள் ஆஜர் செய்தனர்.

கசிப்பு, [illegible] விற்பனையில் ஈடுபட்ட துன்னாலை மேற்கு கரவெட்டியைச் சேர்ந்த ச.செல்வரத்தினத்திற்கு ஒரு இலட்சம் ரூபாவும் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட 2ஆம் குறுக்குதெரு, பருத்தித்துறையைச் சேர்ந்த ஏ.திருநாமலிங்கத்திற்கு 75 ஆயிரம் ரூபாவும் உத்தரவுப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த புலோலி தென்மேற்கு கூவிலைச் சேர்ந்த ரீ.சௌந்தரராஜாவுக்கு 25ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை கொடிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து துன்னாலைப் பகுதியில் கசிப்பு விற்பனை செய்து வந்த கதிரன் [illegible] என்பவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 75ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

(203-218)

# நல்லூர்க் கல்விக் கோட்ட அதிபர்கள் கலந்துரையாடல்

குருநகர்,டிசெ.31

நல்லூர்க் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நல்லூர்க் கல்விக் கோட்டப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (203-51)

# மெமோறியல் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.,31

மானிப்பாய் மெமோறியல் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களை இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பாடநூல் விநியோகம் அன்று இடம் பெறும் என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார். (-1)

# மார்கழி உதய பூசை

சுழிபுரம்,டிசெ.31

மார்கழி மாத உதய பூசை வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் தினமும் அதிகாலை 5 மணிக்கு நடைபெற்று வருகின்றது.

இப்பூசை தைப்பொங்கல் தினம் வரை தொடர்ந்து நடைபெறும்.

(203-28)

# ஊர்காவற்றுறை - காரைநகர் இடையேயான படகுச் சேவையின் நேரம் மாற்றப்பட்டுள்ளது

குருநகர்,டிசெ.31

ஊர்காவற்றுறை - காரைநகருக்கு இடையே நடைபெற்றுவரும் படகுப் பாதைச் சேவையின் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறையிலிருந்து காரை நகருக்கு காலை 7 மணி, 8 மணி, 9 மணி, நண்பகல் 12 மணி, பிற்பகல் 2 மணி, 2.45 மணி, 4 மணி, 5மணி ஆகிய நேரங்களிலும் -

காரைநகரிலிருந்து ஊர்காவற்றுறைக்கு காலை 7.30 மணி, 8.15 மணி, 10 மணி, நண்பகல் 12.30 மணி, பிற்பகல் 2.30 மணி, 3 மணி, 4.45 மணி, 5.30 மணி ஆகிய நேரங்களிலும் படகுச் சேவை தற்போது நடைபெற்று வருகின்றது. (202-51)

# திருவாசக முற்றோதல்

பருத்தித்துறை,டிசெ.31

வடமராட்சி - தென்புலோலி மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத்தில் திருவாசகமுற்றோதல் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இடம்பெறவுள்ளது. (202-226)

# ஆஞ்சநேய ஜெயந்தி

பருத்தித்துறை,டிசெ.,31

சரித்திர பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி ஆஞ்சநேய ஜெயந்தி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் ஆலயத்தில் விசேட பூசைகள் இடம் பெற்று சுவாமி வீதி உலா வருவார். (203-218)

# பருத்தித்துறைப் பகுதிக்கு சுயதொழிலுக்கு 6 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

பருத்தித்துறை , டிசெ,31

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மந்திகை, புலோலி, வட மேற்கு கிராம சேவை அலுவலர் பிரிவு களில் 60 குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக்காக 6 இலட்சம் ரூபாவும் 20 குடும்பங்களுக்கு மலகூட வசதிகளை ஏற்படுத்துவதற்கு 12 இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

'கமநெகும' திட்டத்தின் கீழ் இது வழங்கப்பட்டுள்ளது. (203-218)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் ஆண்டில் நினைவலைகள்

மலர்வு 29 ★ 04 ★ 1940



உதிர்வு 26 ★ 12 ★ 2002

### திருமதி தம்பு செல்லமுத்து (தம்பு ரீச்சர்)

(ஓய்வுபெற்ற கனிஷ்ட அதிபர், யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.)

திதி: 31.12.2007

பேரோடும் புகழோடும் பெருமையாய் வாழ்ந்த உங்கள் நினைவுகளும்
இல்லத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டிய வாழ்வும்
ஐந்தாண்டுகள் என்ன? எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
அணையாத தீபமாய் என்றும் ஒளிரும்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

'திருவேரகம்',
அல்லாரை, மீசாலை. (69457)

அன்பின் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### தனசேகரம் ஞானசேகரம் (ஞானம்)

(நிஷாந்தன் வீடியோ அன்போட்டோ உரிமையாளர்)



கம்பர்மலையைப் பிறப்பிடமாகக் கொண்ட தனசேகரம் ஞானசேகரம் 23.12.2007 ஞாயிற்றுக்கிழமை ஹொலண்டில் அகால மரணம் எய்தினார்.

அன்னார் தனசேகரம்- காஞ்சனமாலா தம்பதியரின் அன்பு மகனும் குணசேகரம், சந்திரசேகரம், ஜெயசேகரம், தவசேகரம், சிவசேகரம், சசிகலா, சூரியகலா, சந்திரகலா, ஜெயகலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.12.2007) திங்கட்கிழமை ஹொலண்டில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்லாமலை,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. (சி/54863)

தகவல்:
உற்றார், உறவினர்.

## சைவ பரிபாலன சபையின் முன்பள்ளி ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.31

சைவ பரிபாலன சபையினர் இலவசமாக நடாத்திவரும் நாவலர் சோலை முன்பள்ளி நாளை மறுதினம் புதன் கிழமை ஆரம்பமாகவுள்ளதாக சபையின் உப தலைவர் தெரிவித்தார்.

தமிழ் சைவ பண்பாட்டுடன் பிள்ளைகளை உருவாக்குவதற்காக முன்பள்ளி இலவசமாக நடத்தப்படுகின்றது என்றும் அவர் கூறினார். (202)

## உடனடித் தேவை

1. பதிவு செய்யப்பட்ட தாதி (Registered Nurse)
2. பதிவு செய்யப்பட்ட பொது சுகாதார மருத்துவ மாது (P.H.M)

தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

**முகாமையாளர்,**
பரி.லூக்கா வைத்தியசாலை,
புத்தூர்.
0602216461

(சி/54862)


**சகலவிதமான ரிச்சார்ட் பாடசாலை அலுவலக உபகரணங்கள்**

* கண்கவர் வர்ணங்களில்
* அழகிய அட்டைப் படங்களுடன்
* மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்.விநியோகத்தர்:
KAJAN ENTERPRISE
Ramalingam Road, Mudamavady, Thirunelvely.
021 222 6678, 0777 550886, 077 4055154

Richard®
Quality Stationery


## பருத்தித்துறை வைத்தியசாலையில் நான்கு தென்பகுதி டாக்டர்கள்

வடமராட்சி, டிசெ.31

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் தென் பகுதியைச் சேர்ந்த நான்கு டாக்டர்கள் தற்போது பணியாற்றி வருகின்றனர்.

இவர்களில் மூவர் வார்டுகளிலும், ஒருவர் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவிலும் நோயாளர்களுக்கு சிகிச்சைகளை அளித்து வருகின்றனர். நோயாளர்களுக்கு அக்கறையுடன் அவர்கள் சிகிச்சை அளித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-160)

### வடமராட்சி வலய ஊழியர் நலன்புரிச் சங்கநிகழ்வுகள்

வடமராட்சி, டிசெ.31

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக ஊழியர் நலன்புரிச் சங்க வருடாந்த ஒன்று கூடல், பிரியாவிடை வைபவம், புதிய நிர்வாக சபைத் தெரிவு ஆகியன இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத் தலைவர் உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளன. (203-160)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10 ★ 04 ★ 1935



மறைவு 01 ★ 12 ★ 2007

### அமரர் சின்னையா இராசா

(ஓய்வுபெற்ற பொலீஸ் உப பரிசோதகர்)

*எங்கள் குடும்பத் தலைவன் எங்களை விட்டுப் பிரிந்து விட்டார்*
*ஏங்கித் தவிக்கின்றோம் எப்போது வருவார் என்று*
*சிரித்த முகத்துடன் அன்பாகக் கதைசொல்லி வாழ்விற்கு வழிகாட்டிய*
*எமது அன்பு அப்பாவை நினைத்தால் ஆறுதலே எமக்கில்லை*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (31.12.2007) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி. (சி/54853)

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## இதய தெய்வத்தின் ஓராண்டு நினைவில்



சிறகொடிந்த பறவைகள் நாம்
திசை தெரியாது தவிக்கின்றோம்
வஞ்சக உலகமிது நல்லவர்க்கு
இங்கு இடமேது
நல்லவை நினைத்து நல்லவை
செய்த எமக்கு பேரிடியோ
இங்கு காத்திருந்தது நாம் அறியோம்
எல்லோர்க்கும் வழிகாட்டி வாழ்வளித்த
தெய்வம் நீங்கள்
உங்கள் பயணமோ பாதி வழிதனிலே
பாதையோரத்திலே முடிந்து விட்டது
இது விதியோ சதியோ நாம் அறியோம்
தாங்கள் இறந்து விட்ட செய்திதனை ஏற்க
இதயம் மறுக்கின்றது
எங்களின் இதயத்து வெண்ணிலவு மறைந்து
ஓராண்டு நிறைவடைகிறது
உங்கள் பிரிவுத் துயர் இதயத்தை
எரிக்கும் பெரும் தீயாய் என்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்.

(68987)

*அன்னாரின் ஓராண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று (31.12.2007) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

அரசடி,
தொண்டைமானாறு.

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

### அமரர் வெள்ளையன் பிரேமச்சந்திரன்

(கிராம அலுவலர் J/383 தொண்டைமானாறு தெற்கு)

ஆண்டவன் படைப்பில்: 26.02.1961
அநியாய அழிப்பில்: 12.01.2007
திதி: 31.12.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டில் வடக்கும் விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டு சமாதானம் கொண்டுவரப்படும்

## கோத்தபாய வவுனியாவில் சொன்னது

வவுனியா,டிசெ.31

கிழக்கு மாகாணத்தை பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து விடுவித்ததைப் போன்று பிறக்கும் புதிய ஆண்டில் வட மாகாணமும் விடுவிக்கப்படும் - இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை காலை வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டு வந்திருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இங்குள்ள பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் அப்போது மேலும் கூறியவை வருமாறு:-

பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கின்ற போதிலும் வடக்கைக் கைப்பற்றும் இலக்கை அடைவதற்கு பாதுகாப்புப் படையினர் அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராக உள்ளனர். கடந்த வருடமும் கூட பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பாதுகாப்புப் படையினர் பல வெற்றிகளைக் கண்டுள்ளனர்.

கிழக்கு மாகாணம், பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ள அதேவேளை, அங்கு தற்பொழுது பல அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. எதிர்காலத்தில் அந்த மாகாணத்தில் தேர்தலை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் துயரங்களைத் துடைத்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பாதுகாப்புப் படையினர் முன்னின்று உழைத்து வருகின்றனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்பொழுது மக்கள் அனுபவித்துவரும் இன்னல்களை எதிர் காலச் சந்ததியினரும் அனுபவிக்க இடமளிக் கப் படமாட்டாது. இதற்காக எதிர்வரும் புத்தாண்டில் தீர்மானம் மிக்க பல நடவடிக்கை கள் முன்னெடுக்கப்படும் - இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

(அ-2)

# கடற்படை கவனத்தை திருப்பி விட்டு எரிபொருள் கடத்துவது நோக்கமா?

## நெடுந்தீவு மோதல் குறித்து சந்தேகம்

கொழும்பு,டிசெ.31

நெடுந்தீவுக் கடற் பகுதியில் கடற்படை டோரா படகொன்றின் மீது கடற் புலிகள் தாக்குதல் நடத்திய சம்பவம் மன்னார் குடாப் பகுதியில் தமிழ் நாட்டில் இருந்து எரிபொருள் கடத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாக இருக்கலாம் என்ற வகையில் அரசப் புலனாய்வுப் பிரிவினர் ஆராய்ந்து வருவதாக தெரிகின்றது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னியில் தற்பொழுது கடும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் இதனால் தமிழ் நாட்டிலிருந்து எரிபொருள் கடத்தி வருவதற்காக கடற்படையினருடன் மோதல் ஒன்றை நடத்தி அவர்களின் கவனத்தை திசை திருப்ப கடற் புலிகள் முயன்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. எரிபொருள் இல்லை என்றால் வேறு மருத்துவ மற்றும் ராணுவத் தளபாடங்களைக் கடத்துவதும் அவர்களின் நோக்கமாக இருந்திருக்கலாம் என்று புலனாய்வுப் பிரிவினர் சந்தேகிப்பதாக நம்பப்படுகின்றது.

(ப)

# யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளுக்கு இன்னும் 98 வைத்திய அதிகாரிகள் தேவை

## டாக்டர் ஜெயக்குமார் தகவல்

குருநகர்,டிசெ.31

யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகள் முற்றுமுழுதாக பற்றாக்குறை இன்றி இயங்குவதற்கு இன்னும் 98 வைத்திய அதிகாரிகளும் 38 பதிவு வைத்திய அதிகாரிகளும் தேவையாக உள்ளனர்.

இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இந்த தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

யாழ்.மாவட்டத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கி வரும் அரச வைத்தியசாலைகளில் வைத்திய உத்தியோகத்தர்களுக்கு தொடர்ந்தும் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையைத் தவிர்ந்த 38 வைத்தியசாலைகள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. இவை வடமாகாண சுகாதார அமைச்சுச் செயலாளர் நிர்வகிக்கப்பட்டு வரும் வைத்தியசாலைகளாகும்.

யாழ்.மாவட்டத்தில் 42 வைத்தியசாலைகள் நோயாளர்களுக்கான சேவையை முன்னர் வழங்கியபோதிலும் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக நான்கு வைத்தியசாலைகள் இயங்க முடியாமல் சேதமடைந்த நிலையில் உள்ளன.

மண்டைதீவு மத்திய மருந்தகம் மற்றும் மகப்பேற்று மகப்பேற்று மனை, காங்கேசன்துறை மத்திய மருந்தகம், பலாலி மத்திய மருந்தகம், முள் ளியான் மத்திய மருந்தகம் ஆகிய வையே இயங்காத நிலையிலுள்ள வைத்திய சாலைகளாகும்.

யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில் 123 வைத்திய அதிகாரிகளும் 58 பதிவு வைத்திய அதிகாரிகளும் அனுமதிக்கப்பட்ட ஆளணியினராக உள்ளபோதிலும் இந்த வைத்தியசாலைகளில் 25 வைத்திய அதிகாரிகளும் 20 பதிவு வைத்திய அதிகாரிகளும் மட்டுமே சேவையில் தற்போது உள்ளார்கள். இதில் 4 வைத்திய அதிகாரிகளும் 26 பதிவு வைத்திய் அதிகாரிகளும் ஒப்பந்த அடிப்படையில் தமது கடமைகளைச் செய்து வருகிறார்கள். இதன்படி 98 வைத்திய அதிகாரிகளும் 38 பதிவு வைத்திய அதிகாரிகளும் யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளை இயக்கத் தேவையாக உள்ளார்கள்.

இதேநேரத்தில் யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில் பணி புரிவதற்காக மத்திய சுகாதார அமைச்சினால் 24 வைத்திய அதிகாரிகள் யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பிரிவுக்கு நியமிக்கப்பட்டபோதிலும் இதுவரை தென்னிலங்கையில் இருந்து 14 வைத்திய அதிகாரிகள் மட்டுமே யாழ்ப்பாணத்துக்கு வந்து தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்கள் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகப் புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு கடமையேற்றுள்ள வைத்திய அதிகாரிகளில் 90 வீதமானவர்கள் சிங்களவர்கள் என்பதும் கடமையைப் பொறுப்பேற்காதவர்கள் தமிழர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி 67 வயதைப் பூர்த்தி செய்தமையால் விலகிச் செல்லும் வைத்தியர்கள் தமது உடல் நிலையைப் பார்க்காமல் கிராமப்புற வைத்தியசாலைகளிலும் தமது கடமையைச் செய்ததுடன் வைத்தியர்கள் இல்லாத வைத்தியசாலைகளில் பதில் கடமையாற்றியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வைத்தியர் பற்றாக்குறையால் இதுவரை இயங்கிவந்த வைத்தியசாலைகளை மூடாமல் இருப்பதற்காக சேவையை முடித்துச் செல்லப் பணிக்கப்பட வைத்தியர்களை மக்கள் நலன்கருதி தொடர்ந்தும் சேவையாற்றுவதற்கு அனுமதிக்குமாறு வடமாகாண சுகாதார பணிமனைச் செயலாளர் மற்றும் யாழ். அரச அதிபர் மூலம் மத்திய சுகாதார அமைச்சிடம் யாழ்.பிராந் திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பணி மனை கோரிக்கை விடுத்துள்ளது.

இதேநேரத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் பிரிவுக்கு நியமிக்கப்பட்டு இதுவரை தமது கடமையைப் பெறுப்பேற்காமல் பின்னடித்து வரும் 10 வைத்தியர்களும் எதிர்வரும் வாரமளவில் யாழ்ப்பாணத்துக்கு வந்து தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்கள் எனவும் தெரியவந்துள்ளது - என்றார்.

(202-51)

# நிகழ்வுகள்... நிகழ்வுகள்...நிகழ்வுகள்...



நல்லூர் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல் கலைக்கழக நூலக இணைப்பாளர் திருமதி எஸ்.கல்பனா உரை நிகழ்த்துவதையும்-

பிரதேச சபையின் முன்னாள் நூலகர் திருமதி அ. சர்வேஸ்வரன், உள்ளூராட்சி ஆணையாளர் திணைக் களத்தைச் சேர்ந்த த. சிவராசலிங்கம், நல் லூர் பிரதேச சபைச் செயலாளர் பொ.வைரமுத்து ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காண லாம்.

(படம் : லக்ஸ்மன்)



இளவாலையைச் சேர்ந்த பசுமைப் புரட்சியாளர் வை.செகராஜசிங்கம் மூவாயிரம் பயன்தரு மரங்களை இலவசமாக வழங்கியுள்ளார். மானிப்பாய் சத்தியசாயி நிறுவனத்தில் பாபாவின் அவதார தினத்தில் 600 பயன்தரு மரங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் எடுக்கப்பட்ட படம்.

(படம் : ரமேஷ்)



மக்கள் வங்கி சுன்னாகம் கிளையில் நவம்பர் மாதம் நடைபெற்ற ஜயஸ்ரீ சீட்டிழுப்பில் பரிசு பெற்ற வாடிக்கையாளர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட நீர்வேலி ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் க. சிவலிங்கத்திற்கு மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே. ஆனந்தராஜா நினைவுப் பரிசு வழங்குவதையும் கிளை முகாமையாளர் மா. சந்திரகாந்தன், உதவி முகாமையாளர் எஸ். ராசமனோகரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்




யாழ்நகர மைய றோட்டறக் கழகத்தால் உரும்பிராய் தெற்கு உதயசூரியன் முன்பள்ளிக்கு கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். இதற்கான நிதியை ஆஸ்திரேலியாவின் றோட்டறக் கழகம் வழங்கியிருந்தது.



சிறுவர் தினத்தையொட்டி ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் ஆனைக்கோட்டை சிறுவர் பாதுகாப்புக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர் தின நிகழ்வை சிறுவர் பாதுகாப்புத் திட்ட உத்தியோகத்தர் எஸ். சர்மிளா விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் சிறுவர் பாதுகாப்புக் குழுவின் தலைவர் வை. சந்திரராசா, ஆனைக்கோட்டை மாதர் சங்கச் செயலாளர் செல்வி சிவராசா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்

(படம் : நவாலிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட்; மேற்கிந்தியத் தீவுகள் அபார வெற்றி

போர்ட் எலிசபெத், டிச.31

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் மேற்கிந்தியத் தீவுகள் 128 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் 2 ருவென்ரி/20 , 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் போர்ட் எலிசபெத்தில் நடந்தது. இப்போட்டியின் முதல் இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் 408 ஓட்டங்களையும், தென்னாபிரிக்கா 195 ஓட்டங்களையும் எடுத்தன. மூன்றாவது நாள் ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் இரண்டாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 146 ஓட்டங்கள் எடுத்து, 359 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தது.

நேற்றுமுன்தினம் நான்காவது நாள் ஆட்டம் நடந்தது. போல் ஹாரீஸின் சுழலில் சிக்கிய மேற்கிந்தியத் தீவுகள் 175 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதன் மூலம் தென்னாபிரிக்காவின் வெற்றி இலக்காக 389 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. இதைத் துரத்திய தென்னாபிரிக்காவுக்கு கிபிஸ் இரண்டாவது இன்னிங்ஸிலும் 'டக் அவுட்' ஆகி அதிர்ச்சி அளித்தார். அணித்தலைவர் சிமித்(11), ஹசிம்அம்லா (8) ஆகியோர் பொறுப்பில்லாமல் துடுப்பெடுத்தாடி விரைவாக பெவிலியன் திரும்பினார். பிரின்ஸ் 10 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்க, தென்னாபிரிக்கா 45 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுகளை இழந்து பரிதாபமாக காட்சியளித்தது.



இந்நிலையில் களமிறங்கிய டீ வில்லியர்ஸ், கலிஸுடன் ஜோடி சேர்ந்தார். நிதானமாக விளையாடிய இந்த ஜோடி தென்னாபிரிக்காவுக்கு நம்பிக்கை அளித்தது. அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய கலிஸ்(85) அரைச் சதம் கடந்தார். மறுமுனையில் இவருக்கு நல்ல ஒத்துழைப்பு தந்த டீ வில்லியர்ஸும் அரைச்சதம் பதிவு செய்தார். இவர் 60 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தார். கடைசிக்கட்டத்தில் நெல் 34 ஓட்டங்களைச் சேர்த்தார். இறுதியில் தென்னாபிரிக்கா இரண்டாவது இன்னிங்ஸில் 260 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதன்மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி 128 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. இரண்டு வருடங்களின் பின்னர் டெஸ்ட் அரங்கில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குக் கிடைக்கும் முதல் வெற்றி இதுவாகும்.

இவ்விரு அணிகளும் மோதும் இரண்டாவது டெஸ்ட் எதிர்வரும் 2ஆம் திகதி கேப்டவுனில் ஆரம்பமாகவுள்ளது.

# அடுத்த போட்டிகளிலும் அடிவாங்குவார்கள் பொண்டிங்

அடுத்துவரும் டெஸ்ட் போட்டிகளிலும் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் ஆஸ்திரேலியப் பந்துவீச்சாளர்களிடம் அடிவாங்குவார்கள்; ஓட்டங்களைக் குவிக்க மிகவும் சிரமப்படுவார்கள் என்று ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் கூறியுள்ளார்.

முதல் டெஸ்ட் வெற்றி குறித்து பொண்டிங் கூறியவை வருமாறு:-

மெல்போண் ஆடுகளத்தின் தன்மை இந்தியாவில் உள்ள ஆடுகளங்களைப் போன்றது. ஆனால், இதிலேயே இந்திய வீரர்கள் ஓட்டங்களை எடுக்கத் திணறினார்கள். எனவே, அடுத்துவரும் போட்டிகளிலும் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் பயங்கரமாகத் திணறுவார்கள். நாங்கள் ஒவ்வொரு துடுப்பாட்ட வீரர்களுக்கு எதிராகவும் ஐந்தாறு திட்டங்களை வைத்திருந்தோம். இப்போது கிடைத்துள்ள வெற்றி எங்களது அருமையான திட்டத்தையே காட்டுகிறது.

''மெல்போண் எங்களுக்கு வெளிநாட்டு ஆடுகளம் மாதிரி. இங்கு வேறு மாதிரியான ஆட்டத்தை அமைத்துக்கொள்ளவேண்டி இருக்கும். அதனைச் சிறப்பாகப் பயன்படுத்தி உள்ளோம். இந்தியத் துடுப்பாட்ட வீரர்களில் டிராவிட், லக்ஸ்மன் பற்றித் தான் நாங்கள் கவலைப்பட்டோம். ஏனெனில் அவர்கள் நீண்டநேரம் நிலைத்து ஆடக்கூடியவர்கள். ஆனால், சிறப்பாகப் பந்து வீசி அவர்களைக் கட்டுப்படுத்தி இருக்கிறோம். எங்களது பந்து வீச்சு மிகச்சிறப்பாக இருந்தது.'' - இவ்வாறு பொண்டிங் கூறினார்.

# துடுப்பாட்டம் ஏமாற்றமே கும்ளே

இந்திய அணியின் துடுப்பாட்டம் மிகவும் ஏமாற்றம் அளிப்பதாக அமைந்துள்ளது என்று அந்த அணியின் தலைவர் கும்ளே குறைகூறியுள்ளார்.

தோல்வி குறித்து கும்பிளே கூறியவை வருமாறு:-

''இந்திய அணியின் துடுப்பாட்டம் மிகவும் ஏமாற்றம் அளித்தது. முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியாவின் ஓட்ட எண்ணிக்கையை எட்டிவிடுவோம் என்று நம்பினேன். ஆனால், அது முடியாமல் போனது. 2ஆவது இன்னிங்ஸிலாவது சிறப்பாகச் செயற்படுவோம் என்று நினைத்தேன். அதுவும் நடக்கவில்லை. நமது அணியில் அனுபவம் நிறைந்த துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். அவர்கள் ஆட்டத்தை மாற்ற வேண்டியதில்லை. மன நிலையை மாற்றிக்கொள்ளவேண்டும். ஓட்ட வேகம் மிகவும் கவலை அளிக்கும் வகையில் உள்ளது. டெஸ்ட்டில் வெற்றிபெற வேண்டும் என்றால் ஓட்ட வேகம் நன்றாக இருக்கவேண்டும்.

''டிராவிட்டின் துடுப்பாட்டம் குறித்துக் கவலைப்படும் அளவுக்கு அவர் சாதாரண வீரர் கிடையாது. அவர் பதற்றமின்றி ரிலாக்ஸாக ஆட்டத்தை அனுபவித்து ஆட வேண்டும். அடுத்த போட்டியில் தனது திறமையை வெளிப்படுத்தி இதனை செய்வார் என்று நம்புகிறேன். யுவராஜ் சிங் பெங்களூரில் சதம் அடித்துவிட்டு இங்கு வந்திருக்கிறார். அவருக்கு மாற்று வீரர்களான ஷேவாக், தினேஷ் கார்த்திக் ஆகியோர் அவ்வளவாக சிறப்பான நிலையில் இல்லை. இருப்பினும் அடுத்த போட்டியில் எந்த வீரர்களைக்கொண்டு இறங்குவது என்பது குறித்து 2 நாள்களில் முடிவு செய்வோம்.'' - இவ்வாறு கும்ளே கூறினார்.




# யுவராஜுக்குப் பதில் ஷேவாக்
## சிறிகாந்த் ஆலோசனை

சென்னை, டிச. 31

யுவராஜ் சிங்கை நீக்கிவிட்டு ஷேவாக்கை ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட்டில் சேர்க்கவேண்டும் என்று முன்னாள் இந்திய அணித்தலைவர் சிறிகாந்த் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக மெல்போணில் நடந்த முதல் டெஸ்ட்டில் இந்திய அணி 337 ஓட்டங்களில் மோசமாக தோற்றது. இந்தத் தோல்வியால் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறார்கள். 2ஆவது டெஸ்ட்டில் தங்கள் திறமையை நிரூபிக்க வேண்டிய நெருக்கடியில் உள்ளனர்.

மெல்போண் டெஸ்ட் தோல்வி குறித்து இந்திய அணியின் முன்னாள் தலைவர் சிறிகாந்த் கூறியவை வருமாறு:-

''இந்திய ஆடுகளங்களில் நமது துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்களைக் குவிக்க முடியும். ஆனால், ஆஸ்திரேலியா போன்ற ஆடுகளங்களில் விளையாடும் போது துடுப்பாட்ட வரிசையில் கவனத்தில்கொள்ளவேண்டும். இரண்டு இன்னிங்ஸிலும் 200 ஓட்டங்களைத் தொடமுடியாமல் போனது. ஆடுகளம் வேகப் பந்துவீச்சுக்கு சாதகமாக இருந்ததால் நமது துடுப்பாட்ட வீரர்கள் சரண் அடைந்தனர். முதல் டெஸ்ட்டில் ஏற்பட்ட மோசமான தோல்வியால் இந்தியாவின் துடுப்பாட்டம் குறித்து அனைவரும் விவாதிக்கும் நிலையில் உள்ளது. ஏனென்றால் நாம் தென்னாபிரிக்கா, இங்கிலாந்துக்கு எதிராக வெற்றிபெற்று இருக்கிறோம்.

''2ஆவது டெஸ்டின் போது துடுப்பாட்ட வரிசையில் மாற்றம் தேவை. வீரேந்தர் ஷேவாக்கை ஆட வைக்கவேண்டும். யுவராஜ் சிங்கை நீக்கவேண்டும். அவரைத் தியாகம் செய்வதில் தவறு இல்லை. டிராவிட் 3ஆவது வீரராக ஆடவேண்டும். அதுவே அணிக்கு நல்லது. வசீம் ஜாபருடன் ஷேவாக் தொடக்க வீரராக ஆட வேண்டும். சிட்னி மைதானம் சுழற்பந்து வீச்சுக்கு உதவியாக இருக்கும். இதனால் முதல் டெஸ்டைப் போலவே 2ஆவது டெஸ்ட்டிலும் 2 சுழற்பந்து வீரருடன் களம் இறங்கலாம்.'' - இவ்வாறு அவர் கூறினார்.

ஆஸியின் முன்னாள் வீரர் அலன் போடர் இந்திய அணி தனது எதிர்பார்ப்பை பொய்யாக்கிவிட்டது என்று குறை கூறியுள்ளார். சொந்த மண்ணில் பாகிஸ்தான் அணியிடம் தொடர்வெற்றி பெற்ற இவர்கள் ஆஸ்திரேலியாவிலும் அசத்துவார்கள் என நினைத்தோம். ஆனால் மெல்போண் டெஸ்டில் இந்திய அணியின் துடுப்பாட்டம் மிகவும் தரம் குறைந்து காணப்பட்டது என்று அவர் மேலும் கூறினார்.

# மெல்போண் துளிகள்....

★ நேற்றுமுன்தினம் இந்திய அணியின் பின்வரிசை வீரர்கள் பொறுப்பில்லாமல் துடுப்பெடுத்தாடினர். 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 157 ஓட்டங்களை எடுத்திருந்த இந்திய அணி கடைசி நான்கு ஓட்டங்களை எடுப்பதற்குள் மீதி 4 விக்கெட்டுகளையும் இழந்தது.

★ 337 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்த் இந்திய அணி டெஸ்ட்டில் தனது மூன்றாவது மோசமான தோல்வியை(ஓட்டங்கள் அடிப்படையில்) சந்தித்துள்ளது. முன்னதாக 2004ஆம் ஆண்டு நாக்பூர் டெஸ்ட்டில் ஆஸ்திரேலியாவுடன் 342 ஓட்டங்களாலும், அதே ஆண்டு கராச்சி டெஸ்ட்டில் பாகிஸ்தானுடன் 341 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் தோல்வியடைந்திருந்தது.


★ அதிக ஆட்டமிழப்புக்கள் செய்த ஆஸி. வீரர் என்ற பெருமையை இயன் ஹீலியிடம் (395 விக்கெட்டுகள்) இருந்து கில்கிறிஸ்ற் தன்வசமாக்கிக் கொண்டார். கில்கிறிஸ்ற் தற்போது 399 விக்கெட்டுகள் வீழ்ச்சியில் பங்கேற்று உலக அளவில் 2ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். அதிக விக்கெட்டுகளை வீழ்த்துவதற்கு பங்குவகித்தவர் வரிசையில் முதல் இடத்தில் தென்னாபிரிக்காவின் மார்க் பௌச்சர் (406 விக்கெட்டுகள்) உள்ளார்.

★ மெல்போண் டெஸ்ட்டில் கில்கிறிஸ்ற் பங்கேற்ற ஒவ்வொரு விக்கெட் வீழ்ச்சிக்கும் ரூபா 7 இலட்சத்து 20 ஆயிரம் வீதம் மொத்தம் ரூபா. 57 இலட்சத்து 60 ஆயிரம் நலநிதியாகத் திரட்டப்பட்டது. இந்தத் தொகை முழுவதும் மெக்ராத் நடத்திவரும் மார்பகப் புற்றுநோய் அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கப்படுகின்றது.

★ நேற்றுமுன்தினம் 40 ஓட்டங்கள் எடுத்த கங்குலி இந்த ஆண்டு டெஸ்ட்டில் அதிக ஓட்டங்களை எடுத்த துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். இவர் 10 டெஸ்ட்டில் 1106 ஓட்டங்களை (சராசரியாக 61.44) எடுத்துள்ளார். முதலிடத்தில் தென்னாபிரிக்காவின் கலிஸ் (1125 ஓட்டங்கள்) இருக்கிறார்.

★ டிராவிட் இந்தாண்டு 19 இன்னிங்ஸ்களில் (10 டெஸ்ட்) துடுப்பெடுத்தாடி ஒரு சதம், 3 அரைச்சதங்கள் உட்பட 606 ஓட்டங்களை மட்டுமே எடுத்துள்ளார். இதுதான் டெஸ்ட்டில் இவரது மோசமான செயற்பாடாகும்.

# இல்லற வாழ்வில் பீற்றர்ஸன்



லண்டன், டிச.31

இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் கெவின் பீற்றர்ஸன் பிரபல பொப் இசைப் பாடகி ஜெஸிகா டெய்லரை நேற்றுமுன்தினம் கரம்பற்றினார்.

தென்மேற்கு இங்கிலாந்தின் வில்ட்சயர் கிராமத்தில் இந்தத் திருமணம் நடைபெற்றுள்ளது.

பீற்றர்ஸனின் திருமணத்திற்கு மிகவும் நெருக்கமான நண்பர்களுக்கு மாத்திரம் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் வோகன், சகலதுறை ஆட்டக்காரர் போல் கொலிங்வூட், வேகப் பந்து வீச்சாளர் டரன் கௌவ் ஆகியோர் திருமண விழாவில் கலந்துகொண்டிருந்தனர்.

# சானியாவுக்கு வந்தது காதல்!

மும்பை, டிச.31

இந்திய நட்சத்திர டெனிஸ் வீராங்கனை சானியா மிர்ஷா இதுவரை சர்ச்சையில் மட்டுமே சிக்கி வந்தார். ஆனால், இப்போது அவர் காதல் வலையில் சிக்கி இருக்கின்றார் எனப் பரபரப்பான தகவல்கள் வெளியாகி உள்ளன. பிரபல ஹிந்தி நடிகர் ஷாஹித் கபூருடன் ஒன்றாக சுற்றித் திரிகின்றார் எனச் செய்தி பரவி வருகின்றது.

சானியா மிர்ஷா கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை பெங்களூரில் உள்ள நட்சத்திர ஹோட்டலுக்குச் சென்றார். அங்கு ஏற்கனவே ஷாஹித் கபூர் தங்கியிருந்தார். அவருடன் நீண்ட நேரம் சானியா செலவிட்டுள்ளார். சானியாவை சந்தித்ததை ஷாஹித் கபூரும் மறுக்கவில்லை. 'நாங்கள் இரவு விருந்தில் கலந்துகொண்டோம். அச்சமயம் நாங்கள் இருவர் மட்டுமல்ல. எனது நண்பர்கள் உட்பட நிறைய பேர் எங்களுடன் இருந்தனர். சானியா சாப்பிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். பின்னர் நானும், எனது நண்பர் ஸ்ரீராம் மட்டும் அறையில் தங்கினோம்.'' என்றார்.



ஆனால், இரண்டு பேரும் கணவன், மனைவி போல் நெருக்கமாக பழகினார்கள் என்றும், அக்கம் பக்கம் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை என்றும் நேரில் பார்த்தவர்கள் சொல்கிறார்கள். சானியா - ஷாஹித் சந்திப்பு பெங்களூருடன் முடிந்தவிடவில்லை. இரு தினங்களின் பின்னர் மும்பைப் புறநகர் பகுதியில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் மீண்டும் சந்தித்துள்ளனர். அப்போது சுமார் 2 மணி நேரம் சிரித்துப் பேசி மகிழ்ந்துள்ளனர்.

சானியாவுடன் சுற்றும் ஷாஹித் கபூர் கடந்த 3 ஆண்டுகளாக பிரபல ஹிந்தி நடிகை கரீனா கபூரைத் தீவிரமாக காதலித்தார். கரீனா இப்போது இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவரான மன்சூர் அலிகான் பட்டோடியின் மகனும், பிரபல ஹிந்தி நடிகருமான சயிப் அலிகானுடன் சுற்றுகிறார். கரீனா கைவிட்டதால், மனமுடைந்திருந்த ஷாஹித் கபூர் இப்போது கரீனாவை விட பிரபலமான சானியாவுடன் சுற்றிக்கொண்டிருக்கிறார். இதேவேளை, ஹோப்மேன் கிண்ண டெனிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் சானியா மிர்ஷா நேற்றுமுன்தினம் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு நடக்கின்றது இறுதிக் கிரியைகள்

யுத்த தீவிரத்துக்கு வழிசெய்த 2007 ஆம் ஆண்டு இன்றுடன் கழிய நாளை புதுவருடம் - 2008 ஆம் ஆண்டு - பிறக்கின்றது.

போர் மேகங்கள் சூழ்ந்து, கொடூர வன்முறைப் புயலாக யுத்தம் வெடிக்கும் சூழலில் புத்தாண்டுக்குள் நுழைகிறோம்.

கடந்த சுமார் ஆறுவருடங்களாகப் பெயரளவுக்கேனும் நின்று தாக்குப்பிடித்த யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு இறுதிக் கிரியை செய்யும் காலம் வந்துவிட்டது என்பதை யுத்தத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருமே திட்டவட்டமாகவும், தெளிவாகவும் கோடிகாட்டி விட்டதால், அது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்புடன் 'ஈழ யுத்தம் - 4' என்ற அவத்தைக்குள் - அவலத்துக்குள் - புத்தாண்டில் நாடு பிரவேசிக்கப்போகின்றது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் இந்த செயற்றிறன் அற்ற நிலைமை குறித்து 2006 இறுதியிலேயே - சுமார் ஒரு வருடத்துக்கு முன்னரே - பிணக்குக்குரிய தரப்புகளில் ஒன்றான விடுதலைப் புலிகளின் சார்பில் அதன் தலைவர் வே. பிரபாகரன் தெளிவுபடுத்தியிருந்தார்.

''மஹிந்தவின் அரசு படைப்பலத்தை அடிப்படையாகக் கொண்டே தமிழரின் தலைவிதியை நிர்ணயிக்க விரும்புகிறது. தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து, அதன்மூலம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று தான் விரும்பும் அரைகுறைத் தீர்வைத் தமிழர் தலையிற் கட்டிவிட அரசு எண்ணுகின்றது. இந்தப் போர்முனைப்புச் செயற்பாட்டால் போர்நிறுத்த ஒப்பந்தம் செத்துச் செயலிழந்து போய்க் கிடக்கின்றது. ஒப்பந்தம் கிழிக்கப் படாமலேயே உக்கிப்போன தாளாகி உருக்குலைந்து கிடக்கிறது. புலிகளின் இலக்குகளுக்கு எதிராக மும்முனைகளிலும் தாக்குதல் தொடரும் என அறிவித்து, மஹிந்த அரசு ஒப்பந்தத்திற்கு ஈமைக் கிரியைகளையும் நடத்தி முடித்திருக்கின்றது.''

- இப்படி 2006 நவம்பர் 27 ஆம் திகதி தமது மாவீரர் தின உரையில் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் கூறியிருந்தார்.

அக்கருத்துக்களை இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இப்போது வெளியிடும் கருத்துக்கள் நிரூபிக்கின்றன.

'' யுத்த நிறுத்த உடன்படிக்கை வெறும் காகிதத்திலேயே உள்ளது. யுத்த நிறுத்தம் நடைமுறையில் இல்லை என்பதை நாம் தெளிவாக நோக்க முடியும். இது கேலிக்கூத்தான விடயம்.

''ஆகவே நாம் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். அதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும். யுத்த நிறுத்த உடன்படிக்கை இருப்பதாகக் கூறி நாம் ஏன் மக்களை ஏமாற்ற வேண்டும்?

''அத்துடன் பயங்கரவாத அமைப்பான புலிகளை நாம் தடை செய்யவேண்டும். அதனுடன் நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

''யுத்த நிறுத்த உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டு வந்து, புலிகளைத் தடைசெய்த பின்னர், தமிழ் மக்களின் துன்பங்களுக்கு தீர்வு காண்பதற்கான புதிய யோசனைகளை ஜனாதிபதி முன்வைக்க முடியும்.''

- இவ்வாறு கடந்த வார இறுதியில் கொழும்பு, ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருக்கிறார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரான அவர், ஜனாதிபதிக்கு அடுத்து நாட்டின் பாதுகாப்புவிடயங்களில் அதிகாரமும், செல்வாக்கும் கொண்ட உயர் பிரமுகராவார். அவரின் மேற்படி கருத்தை அரசின் நிலைப்பாடாகக் கொள்வதில் தவறில்லை.

ஓராண்டுக்கு முன்னர் புலிகளின் தலைவர் தமது மாவீரர் தின உரையில் கூறிய பல முக்கிய விடயங்களை மேற்படி பேட்டிமூலம் உறுதிப்படுத்தியிருக்கிறார் பாதுகாப்புச் செயலாளர்.

* யுத்தநிறுத்த ஒப்பந்தம் வெறும் காகிதத்தில்தான் உக்கி, உருக்குலைந்து போய்க் கிடக்கின்றது.

* அதற்கு இறுதிக்கிரியை நடத்தி, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முற்றாக முடிவுக்குக் கொண்டுவர அரசு திட்டமிடுகின்றது.

* அதன் பின் முழு அளவில் போர் நடத்தி, தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து, அதன் மூலம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று தான் விரும்பும் அரைகுறைத் தீர்வைத் தமிழர் தலையில் கட்டிவிட அரசு எண்ணுகின்றது.

- இப்படி பிரபாகரன் அப்போது கோடிகாட்டிய விடயங்களே இப்போது மெல்ல மெல்லக் கொழும்பில் கட்டவிழ்கின்றன.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை உத்தியோகபூர்வமாக முடிவுக்குக் கொண்டுவந்து, புலிகள் இயக்கம் மீது தடைவிதித்து, முழுப்போரைக் கட்டவிழ்த்து விட்டு, அதன் மூலமாகப் புலிகளை அடக்கி, ஒடுக்கியபடி இனப்பிரச்சினைக்குத் தமது தீர்வுத் திட்டத்தை ஜனாதிபதி முன்வைக்கலாம் என்று கூறுவது இத்தகைய உள்நோக்கத்தைத்தானே காட்டுகின்றது?

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் தமது அரசு, கவிழும் சூழ்நிலை நெருங்கி வந்தபோது, தமது சிரேஷ்ட ஆலோசகரும், சகோதரருமான பஸில் ராஜபக்ஷ எம்.பி.மூலம் ஜே.வி.பி. தலைவர்களோடு - அவசர அவசரமாக - சமரசப் பேரப்பேச்சு நடத்தினார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்றும் -

அப்போது ஜே.வி.பிக்கு சில முக்கிய வாக்குறுதிகளை வழங்கி, தனது அரசை கவிழவிடாமல் அக்கட்சியின் (ஜே.வி.பி யின்) எம்.பிக்களை வளைத்துப் போட்டு நிலைமையை அவர் சமாளித்தார் என்றும் - கூறப்படுகின்றது.

அப்போது பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகளான ஜே.வி.பியைச் சாந்தப்படுத்தி, தம் வழிக்கு வரப்பண்ணுவதற்காக அரசுத் தலைவர் கொடுத்த சில முக்கிய உறுதிமொழிகளில் புலிகளைத் தடைசெய்தல், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கிழித்து எறிதல் என்பவையும் அடங்கும்.

அந்த வாக்குறுதிகளைச் செயற்படுத்தி, ஜே.வி.பியைச் சமாளித்துத் தனது அரசைத் தொடர்ந்து தக்கவைக்கவே அரசு முற்படுகின்றது. அச் செயற்பாட்டின் ஆரம்ப அத்தியாயங்களே யுத்த நிறுத்த உடன்பாட்டை ரத்துச் செய்து, புலிகள் மீது தடை விதிக்கும் எத்தனங்கள் பற்றிய அரசின் அறிவிப்பாகும்.

# விடுதலைப் புலிகளின் தாக்குதல் படகுகள் படையினரின் 'டோரா'வுக்கு இணையானவை

## 'லக்பிம' வார ஏடு தகவல்

கொழும்பு, டிசெ. 31

''கடற்சமர்களின்போது கடற்புலிகளின் பெரிய தாக்குதல் படகான முராஜ் படகுகளே படையினரின் டோராக்களுக்கு இணையாக தாக்குதல்களை நெறிப்படுத்துபவை. இந்த அதிவேகத் தாக்குதல் படகுகள் 23 மி.மீ. பீரங்கிகளை கொண்டிருப்பதுடன் கட்டளைப் படகாகவும் செயற்பட்டு வருவதுண்டு'' - இவ்வாறு 'லக்பிம' வார ஏடு தெரிவித்துள்ளது.

'லக்பிம'வின் ஆங்கிலப் பதிப்பின் பாதுகாப்பு ஆய்வுப்பத்தியில் இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கடந்த புதன்கிழமை காலை 8 மணியளவில் பி-413 இலக்கமுடைய டோரா அதிவேகத் தாக்குதல் படகு, கடற்புலிகளின் படகுத் தொகுதியை நெடுந்தீவுக்கு தென்மேற்கு கடற்புகுதியில் அவதானித்தது. அந்தத் தொகுதியில் 16 கடற்புலிப் படகுகள் இருந்தன.

டோராப் படகுகள் தமது படகுகளை அண்மிப்பதைத் தவிர்ப்பதற்காக கடற்புலிகளின் படகுகள் கடற்கரையை அண்மித்தே காணப்பட்டன. இதனைத் தொடர்ந்து கடற்படையினரின் வடபிராந்திய கட்டளைப் பீடம் விழிப்புநிலைக்குட்படுத்தப்பட்டது.

மேலதிக டோராத் தாக்குதல் படகுகள் அனுப்பப்படும் வரையிலும் கடற்புலிகளின் படகுகளை கண்காணிக்குமாறு பி-413 டோராவுக்கு உத்தரவிடப்பட்டது. மேலதிகமாக அனுப்பப்பட்ட படகுகளுடன் 12 டோராப் படகுகள் கடற்புலிகளுடன் மோதுவதற்கு தயாராகின. கடுமையான சமர் ஆரம்பமாகியது. அந்தச்சமரின் முன்னணியில் பி-413 படகே இருந்தது.

எனினும், டோராக்களின் படகுத் தொகுதியை ஊடறுத்துச்சென்ற கரும்புலிப் படகு ஒன்று பி-413 டோராவை நோக்கிச் சென்றது. ஆனால், அது சற்று முன்னதாகவே வெடித்துவிட்டது. அந்த வெடிப்பதிர்வினால் டோராப் படகு செயலிழந்தது. அதேவேளை, இரண்டாவது கரும்புலிப் படகு வேகமாக வந்துமீண்டும் ஒரு தடவை மோதி வெடித்தது. அதன்பின்னர் பி-413 டோராப் படகு வெடித்துச் சிதறியது.

இதன்போது அந்தப் படகின் கட்டளைத் தளபதி லெப். கொமாண்டர் லலித் ஏக்கநாயக்கவும், 11 கடற்படையினரும் கொல்லப்பட்டனர். கட்டளைத் தளபதியின் சடலமும் மற்றுமொரு கடற்படை சிப்பாயின் சடலமும் கடந்த வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டன. எனினும், இரு கடற்படையினரை விடுதலைப் புலிகள் கைதுசெய்துள்ளனர் எனவும் கடற்படையின் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இது குறித்து விடுதலைப்புலிகளிடம் இருந்து எந்தத் தகவல்களும் இல்லை. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் எந்தத் தரப்பும் தொடர்பு கொள்ளவில்லை.

இதனிடையே கடற்படையினரின் தேடுதல்களின்போது இரு கடற்படையினர் மீட்கப்பட்டனர். இந்த கடும் சமரின்போது இஸ்ரேலியத் தயாரிப்பான மற்றுமொரு டோராப் படகும் சேதமடைந்தது. அது பின்னர் காங்கேசன்துறை கடற்படைத் தளத்திற்கு கட்டி இழுத்துச் செல்லப்பட்டது.

பொதுவாக கடற்சமர்களின்போது கடற்புலிகளின் பெரிய தாக்குதல் படகான முராஜ் படகுகளே டோராக்களுக்கு இணையாக தாக்குதல்களை நெறிப்படுத்துபவை. இந்தப் படகுகளின் கடும் சமர்களுக்கு மத்தியில் உயர் வேகம் கொண்ட கரும்புலிப் படகுகள் இலகுவாக கடற்படையினரின் படகை அண்மித்து விடும்.

கரும்புலிகளின் படகுகள் 200 குதிரைவலு வேகமுடைய இயந்திரங்கள் உடையவை. எனவே, அவை மிக உயர் வேகமுடையதுடன், அலைகளுக்கு மத்தியில் வெளியில் தெரிவதும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். எனவே கடற்படையினர் அவற்றைக் கண்டறிந்து அழிப்பது கடினமானது.

தற்போது விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் தற்கொலைப் படகுகள் 'ஸ்ரெல்த்' வகையைச் சேர்ந்தவை. அவற்றை ராடர் திரைகளில் கண்டறிவது கடினமானது. அவற்றின் வெடிக்கும் முனை முன்புறம் உள்ளதால் கடற்படைப் படகின் அடிப்பகுதியில் மோதியே அவை வெடிப்பதுண்டு.

விடுதலைப் புலிகளின் முராஜ் அதிவேக தாக்குதல் படகில் 23 மி.மீ. பீரங்கிகள் பொருத்தப்பட்டிருக்கும். அதுவே கட்டளைப் படகாக செயற்படுவதுண்டு.

இந்தச் சமரில் வான் படையினரின் இரு எம்ஐ-24 தாக்குதல் ஹெலிக்கொப்டர்கள், கிபிர் தாக்குதல் விமானங்கள் இணைந்து கொண்டன.

கடற்படையினரின் அதிவேக தாக்குதல் டோரா படகானது (பி-413) அலுமினியத்திலான அடிப்பகுதியையும், அதிக வேகத்தையும் கொண்ட தாக்குதல் படகாகும். கடந்த 13 வருடங்களில் கொழும்பு டொக்கியாட் நிறுவனம் இத்தகைய 48 படகுகளை கட்டியிருந்தன. அவை இலங்கை மற்றும் பிராந்திய நாடுகளில் கடற்படைகளால் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த வகைப்படகுகள் கரையோர சுற்றுக்காவல், கண்காணிப்புப் பணிகளுக்கு எனச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தாக்குதல் படகுகளாகும். இது 45 தொடக்கம் 53 நொட்ஸ் வேகமுடையது. 24 மீற்றர் நீளமான இந்தப் படகு 1,630 கி.வார்ஸ் கொண்ட இரட்டை நீரூந்து விசை இயந்திரத்தைக் கொண்டது. இது முன்னைய டோராப் படகுகளை விட நவீனமானது. 12 கடற்படையினர் பணியாற்றும் இடவசதியும் அதில் உண்டு.

தற்போது கடற்படையினரிடம் அதிவேகத் தாக்குதல் படகு -III (UFAC III and IV), அதிவேக தாக்குதல் படகு IV என்பன உண்டு. அவற்றில் 23 மி.மீ. பீரங்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. இது சமரின்போது அதிகூடிய வேகமான 53 நொட்ஸ் வேகத்தை எடுக்க கூடியதுடன் அதன் பல செயற்பாடுகள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் படகு சமரில் சேதமடைந்தால் அவசரமாக கட்டி இழுத்துச் செல்லும் வசதிகளையும் கொண்டது - என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(மற்றொரு செய்தி ஏழாம் பக்கத்தில்)

# ரூபவாஹினியின் அதிகாரிக்கு பாதுகாப்பு

கொழும்பு, டிச. 31

அமைச்சர் மேர்வின் சில்வா குழுவினர் ரூபவாஹினிக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்த சமயம் அங்கு தாக்குதலுக்கு உள்ளான ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் செய்திப் பணிப்பாளருக்கு இப்போது பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது.

ரூபவாஹினி முகாமைத்துவப் பணிப்பாளரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளைத் தொடர்ந்தே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடு வழங்கப்பட்டிருப்பதாக ஊடகத்துறை அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

இதனடிப்படையில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் செய்திப் பணிப்பாளரின் பாதுகாப்புக்காக நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளனர் என அமைச்சர் யாப்பா தெரிவித்தார்.

(சி)

# இலங்கை மீது சர்வதேச ஆயுதத்தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### நாங்கள் மௌனமாக இருக்க முடியாது

எனவே, இலங்கையில் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இனப்படுகொலை மற்றும் இராணுவ ஆயுதக் குழுக்களின் பயங்கரம் குறித்து நாங்கள் மௌனமாக இருக்க முடியாது.

இலங்கை அரசின் முகவர்களால் மேற்கொள்ளப்படும் யுத்தக் குற்றங்களையும் மனித உரிமைமீறல்களையும் ஐக்கிய நாடுகளின் அமைப்புகள் பல கண்டித்துள்ளன. சர்வதேச சமூகமும் மனித உரிமை அமைப்புகளும் கவலை வெளியிட்டுள்ளன.

இலங்கை முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, எதிர்க்கட்சி தலைவர் ஆகியோரும் இத்தகைய நிலைமை அங்கு நிலவுகின்றமையை உறுதிப்படுத்தியுள்ளனர்.

தமிழ் மக்களின் குரலை ஒடுக்கும் நோக்குடன் கொலைகள், ஆட்கடத்தல்கள், அச்சுறுத்தல்கள் என்பன இடம் பெறுகின்றன.

மக்களின் வாழ்விடங்கள் மீது விமானக் குண்டு வீச்சுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

### யாழ் மக்கள் சிறைவைக்கப் பட்டுள்ளனர்

'ஏ - 9' வீதி மூடப்பட்டதால் யாழ்ப்பாண மக்கள் சிறைக் கைதிகளாக்கப்பட்டுள்ளனர்; பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மேலும் உணவு, மருந்துப் பொருள்கள் தாராளமாக எடுத்துச் செல்லப்படுவதும் தடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் முகவர்களால் மேற்கொள்ளப்படும் இனப்படுகொலைகள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் போன்றவை சர்வதேச சட்டங்களுக்கு முரணானவை. ஆஸ்திரேலியாவின் குற்றவியல் சட்டத்தின் கீழ் இவை குற்றச் செயல்களாகக் கருதப்படுகின்றன.

தனது பிரதேசத்துக்கு உட்பட்ட சகல மக்களையும் இன, நிற, மத வேறுபாடின்றிப் பிரதிநிதித்துவப்படுத்தி, சமவுரிமை மற்றும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடுகளை மதித்து ஆட்சி புரியும் அரசு ஒன்றை நாடு கொண்டிருக்கும் வரையிலேயே அந்த நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டையோ அரசியல் ஐக்கியத்தையோ பாதித்துக் குழப்பும் வகையில் எந்த நடவடிக்கையையும் பிறநாடுகள் மேற்கொள்ளக் கூடாது என நாடுகளுக்கு இடையிலான நட்புறவு மற்றும் இணக்கச் செயற்பாடு தொடர்பான சர்வதேச சட்டக் கோட்பாட்டைப் பிரகடனப்படுத்தும் ஐ.நாவின் 2,625ஆவது தீர்மானம் தெளிவாகத் தெரிவிக்கின்றது.

### பாதிக்கப்படும் மக்கள் கூட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உண்டு

மேலும் இனப்படுகொலை, இனச் சுத்திகரிப்பு, யுத்தக் குற்றம் என்பன மனித குலத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும்போது அவற்றால் பாதிக்கப்படும் மக்கள் கூட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் ஐக்கிய நாடுகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் உண்டு.

இதன் காரணமாக ஆஸ்திரேலிய அரசு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியும் அரச கட்டமைப்புகள் ஊடாகவும் -

* இலங்கை அரசுக்கான சகல உதவிகளையும் நிறுத்துதல். ஏனைய சக நாடுகளையும் இவ்வாறு செயற்படுமாறு தூண்டுதல்.

* இலங்கைக்கு ஆயுதங்கள் விநியோகிப்பதைத் தடைசெய்யும் வகையில் சர்வதேச ஆயுதத் தடை விதிப்பதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.

* இனப்படுகொலை, யுத்தக் குற்றம், மனித உரிமை மீறல் போன்றவற்றை இழைத்த - தூண்டிய - அவற்றுக்கு உதவிய- அவற்றை அசட்டை செய்த - இலங்கை அரசினதும், அதன் படைகளினதும் உறுப்பினர்களுக்கு எதிராக சர்வதேச பயணத்தடை விதிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

* இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.

* தமிழ் மக்களின் சமவுரிமை மற்றும் சுயநிர்ணய உரிமை ஆகியவற்றுக்கான கொள்கைகளை அங்கீகரித்தல்.

- போன்றவற்றை மேற்கொள்ள ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. (உ)

## நாளை

| | | |
|---|---|---|
| மார்கழி - | | 16 செவ்வாய்க்கிழமை 01.01.2008 |
| திதி | : | நவமி முழுவதும் |
| நட்சத்திரம் | : | அத்தம் மு.ப 8.30 வரை |
| சுபநேரம் | : | 10.59-12.29 |
| ராகுகாலம் | : | 03.29-04.59 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரச விமானப்படையின் குண்டுவீச்சில் சேதமாக்கப்பட்ட 'புலிகளின் குரல்' வானொலி நிறுவனம் நேற்று முன்தினம் மக்களின் பார்வைக்கு விடப்பட்ட போது எடுக்கப்பட்டபடங்கள்.

# அழிவை ஆக்கத்துக்கு மாற்றும் மனப்பாங்கே வெற்றி தரும்

## பிறக்கும் புதிய ஆண்டில் அதுவே தேவை

கிளிநொச்சி, டிசெ.31

அழிவு இன்றி ஆக்கம் கிடைக்காது. அழிவை ஆககத்திற்கு மாற்றக்கூடிய மனப்பாங்கைக் கொண்டிருக்கின்ற மக்களே வெற்றி அடைவார்கள் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் க.வேபாலகுமாரன் தெரிவித்திருக்கின்றார்.

புலிகளின் குரல் நிறுவனம் மீதான அரச விமானப் படையின்தாக்குதலில் சேதமடைந்த கட்டடத் தொகுதிகளை மக்களின் பார்வைக்காக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நிகழ்வின் காட்சி அரங்கம் ஓர் விடுதலைப் போரினுடைய அரங்கம் - ஓர் காட்சிப்படுத் தல்-நினைவுக்காட்சி-நிகழ்ச்சி எல்லாமே வந்து சொல்கின்ற செய்தி மிகக் கடினமானது. புரிவதற்கே எவருக்கும் சிக்கலானது.

அழிவு இன்றி ஆக்கம் கிடைக்காது. அழிவை ஆக்கத்திற்கு மாற்றக்கூடிய மனப்பாங்கைக் கொண்டிருக்கின்ற மக்களே வெற்றி அடைவார்கள் என்ற செய்தி நீங்களும் நாங்களுமாக திரும்பவும், மனதில் நிறுத்தி இந்த இடத்தில் உறுதிகொண்டு எங்களின் வரும் ஆண்டை வரவேற்று அதற்கும் முகம் கொடுத்து எமது விடுதலைப்பயணத்தைத்தொடர்வோம்என்றார்-

இந்நிகழ்வில் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

அரச வான்படையானது தமிழ் மக்களின் வாழ்விடங்கள் மற்றும் பொது இடங்கள், மருத்துவமனைகள், மக்களுக்கான ஊடகங்கள் மீது தாக்குதல்களை நடத்தி அழிவை ஏற்படுத்திவருவதைநாம்காட்சிப்படுத்தவேண்டும்.

வான்படையினர் குண்டுகளை வீசி எமது பிரதேசத்தில் எவ்வளவோ பொதுக்கட்டடங்கள், செஞ்சோலை வளாகம் போன்ற பல இடங்களை அழிக்கின்றனர். நாம் இந்த அழிவுகளைக் காட்சிப்படுத்தவேண்டும். அப்போது தான் இலங்கை அரசின் கோரத்தை எமது பின்னுள்ள சமுதாயமும் இதைக் கண்டு சிந்தித்துச் செயற்படும். நாம் அழிவுகளுக்குள்ளேயே வாழ்கின்றோம்.

மக்களின் பொதுவான இடங்களை எல்லாம் வான்படை அழித்து வருகின்றனது. புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளரின் முயற்சி காரணமாக இந்தப் பேரழிவு காட்சிப் படுத்தப்பட்டிருப்பது நல்ல விடயம். இதுபோன்ற வான்படையால் எமது பிரதேசத்திலுள்ள மக்களின் நலன் சார்ந்த இடங்கள் மீது தாக்குதல் நடாத்தி அழிவைஏற்படுத்தினால்நாம்அதைக் காட்சிப்படுத்தி வைக்க வேண்டும். வெளிநாடுகளில் எல்லாம் போர் நடைபெற்ற இடங்களில் இப்பேற்பட்ட அழிவுக்காட்சிகள் காட்சிப்படுத்தப்பட்டு, பாதுகாக்கப்பட்டு மக்கள் பார்வைக்கு விடப்பட்டுள்ளன- என்றார் புதுவை இரத்தினதுரை. (அ)

# ஆழிப்பேரலை அனர்த்த நிதியை அள்ளிச்சென்றமை எங்ஙனம்?

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வினா

ஆழிப்பேரலை அனர்த்தத்தைத் தொடர்ந்து புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளுக்காக வழங்கப்பட்ட பெருமளவு நிதி காணாமல் போனமை குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆச்சரியம் வெளியிட்டுக் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி பதவியிலிருந்து 2005 நவம்பரில் நான்பதவிவிலகியகாலத்தில்ஆழிப்பேரலை அனர்த்த நிதியை மத்திய வங்கி யில் ஜனாதிபதி நிதியின் கீழ் தாம் வைப்பிலிட்டு வைத்திருந்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆழிப்பேரலைக்குப் பின்னர் பதவியிலிருந்த 11 மாத காலப் பகுதியிலும் தான் முழுமையான கணக்குகளை பேணி வந்தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுமார் 250 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகை மத்திய வங்கியில் அச்சமயம் இருப்பில் இருந்தது. அப்படியிருக்க இப்போது உரிய புனரமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தியடையவில்லை என்ற உண்மை அம்பலமாகியிருப்பது குறித்து அவர் கேள்வி எழுப்பியிருக்கின்றார். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 15 ஆயிரம் குடும்பங்கள் இன்னமும் வீடுகளில்லாமல் தவிக்கின்றமை குறித்து அவர் ஆச்சரியம் வெளியிட்டுள்ளார். (சி)

### கொழும்பிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர் விவரங்களை நாடாளுமன்றம் கூடும்போது வெளியிடுவேன்.

அரசில் அங்கம் வகிக்கின்ற ஒரு சில அமைச்சர்களுடைய ஆதரவாளர்கள் மற்றும் அவர்களுடைய செயற்பாடுகள் சம்பந்தமாகவும் நாடாளுமன்றில் அறிக்கை ஒன்றையும் சமர்ப்பிக்கவுள்ளேன்.

இராணுவத் துணைக்குழுக்களின் அச்சுறுத்தல்களால் குடாநாட்டில் இருந்து மக்கள், தொழில் அதிபர்கள் எனப் பலர் அங்கிருந்து வெளியேறிவிட்டனர், வெளியேறிக் கொண்டும் வருகின்றனர்.

கடந்த ஏழரை ஆண்டுகளாக தனக்கு வழங்கப் பட்டிருந்த பாதுகாப்பும் விலக்கப் பட்டிருக்கிறது - என்றார் அவர். (சி)

### இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் இராணுவ தொழில்நுட்பங்களை விற்பனை செய்வதற்குள்ள அனுமதி தடை செய்யப்பட்டுள்ளது.

எனினும் கடற்பாதுகாப்பு, தொலைத்தொடர்பு, வான் கண்காணிப்பு தொழில்நுட்பங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் தடைசெய்யப்படவில்லை. இதனிடையே படைத்துறைப் பயிற்சி உதவிகள் இந்தத் தடையில் உள்ளடங்கவில்லை என்று வாஷிங்டனில் இருந்து வெளியாகும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன எனவும் கூறப்பட்டுள்ளது.

### அமைச்சரவை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறியக்கிடைக்கிறது.

புத்தாண்டில் முழு அமைச்சரவை மாற்றம் ஒன்றை மேற்கொள்ள ஜனாதிபதி உத்தேசித்திருந்தாராயினும், அத்தகைய நடவடிக்கை இப்போதைய நிலையில் அரசுக்குள் வீண் அரசியல் குழப்பங்களை ஏற்படுத்தும் என்பதால், அதனை மேற்கொள்வதைத் தவிர்க்கவே ஜனாதிபதி தற்சமயம் விரும்புகின்றார் என்றும் கூறப்படுகின்றது.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தின்போது அரசுக்குக் கைகொடுத்து உதவி, அரசைக் காப்பாற்றிய ஜே.வி.பி., அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்படி தொடர்ந்தும் அரசுத் தலைமையை வற்புறுத்தி வருகின்றது.

ஆனால் இன்றைய அரசியல் சூழ்நிலையில் தம்மால் அவ்வாறு செய்ய இயலாதிருப்பதாகத் தனது நம்பிக்கையான பிரமுகர்கள் மூலம் ஜே.வி.பி.க்கு ஜனாதிபதி எடுத்து விளக்கியிருக்கின்றார் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.(சி)

### புதுடில்லிக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தியுள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது குறித்து இலங்கையில் அரசியல் உறுதிப்பாடு காணப்படாததை அவர் இந்தியத் தலைவர்களிடம் சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் -

அனைத்துக் கட்சிக் குழுவின் யோசனைகளை தாமதப்படுத்தும் தந்திரோபாயங்களையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார் என்றும் - கூறப்பட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வில்லை என்ற புதுடில்லியின் கொள்கை மீண்டும் எதிர்க்கட்சித் தலைவரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இவ்வாரம் திரும்பவுள்ள எதிர்க்கட்சித் தலைவர் இங்கு அரசுக்கு எதிராகத் தாம் முன்னெடுக்கவுள்ள வெகுஜனப் போராட்டங்கள் குறித்து அறிவிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)


2010 A/L
CHEMISTRY
(Group Class)
★GENERAL
★BASIC
ஆரம்பம்: 01.01.2008
செவ்வாய்: 4 p.m.
பிரிவு 1 புத,வெள் - 4.00
பிரிவு 2 சனி, ஞாயி 2.00
DIAS
B.Sc. (Hons) Spl in Chem
College Of Chemistry
32,பிறவுண் Rd. நல்லூர்

SUBRA (14) சித்தன்கேணி
2010 A/L
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம் 05.01.2008 சனி மாலை 4 மணி

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
நாளை பிறக்கவிருக்கும் புத்தாண்டை முன்னிட்டு இன்றும், நாளையும் வியாபாரிகளுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் விசேட விலையில்
* மெய்கண்டான் தினக்கலண்டர்
* லீலா தினக்கலண்டர்
* விளம்பரக் கலண்டர்கள்
* படக் கலண்டர்கள்
* சகல வகையான டயறிகள்
தேவைகளுக்கு உடனே விரையுங்கள்
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் ஒளி
டிசெம்பர்.23-டிசெம்பர்29
வாரத்துக்குரியஇதழ்
இன்று விற்பனையில்
உதயன் முகவர்களிடம்
கேட்டு வாங்குங்கள்.

பெரதேனியா கல்வி நிலையம்
கேணியடி, கொக்குவில் மேற்கு.
புதிய கல்வி ஆண்டு - 2008
தரம் 1 முதல் A/L வரை சகல வகுப்புகளும் சிறப்பாக நடைபெறுகின்றன.
புதிய அனுமதிகள் ஜனவரி 15 வரை மட்டும் வழங்கப்படும்.
A/L - 2010
கணக்கீடு :- திரு.க.அற்புதராஜா
(B.Com Diploma)
புதிய பிரிவுகள் ஆரம்பம் - 01.01.2008
செவ்வாய் பி.பகல் 1மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன

தொழிற் பயிற்சிகள்
* MOBILE PHONE REPAIRING
HARDWARE HARDWARE REPAIRING
SOFTWARE PHONE LOCK காலம்: 1 மாதம்
* RADIO - T.V - VIDEO DECK REPAIRING
AMPLIFIER DECK MONITER
T.V U.P.S PRINTER
SATELLITE ANTENNA
காலம்: 9 மாதம்
* REFRIGERATION AND AIR - CONDITIONING
REFRIGERATOR SPLIT AC VEHICLE AC
DEEP FREEZER WINDOW AC
காலம்: 5 மாதம்
*ELECTRICAL WIRING AND REWINDING
HOUSE WIRING SINGLE PHASE MOTOR
FAN WINDING DOUBLE PHASE MOTOR காலம்: 6 மாதம்
* DIPLOMA IN HARDWARE ENGINEERING காலம்: 3 மாதம்
ஆரம்பம்: 03-01-2008 (கிழமை நாள்கள்)
05-01-2008(சனி, ஞாயிறு)
விவரங்களுக்கு:-
JAFFNA TECHNICAL INSTITUTE
NO. 45, CLOCK TOWER ROAD,
JAFFNA.
(PHONE: 021-222-6434)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org